கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™ • VLAMBARAM™
Canada's Oldest Tamil Newspaper

34ஆவது ஆண்டில்
Tel: 416-282-8059
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com

நதி: 34 பாலம்: 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2024

Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN
MANIKKAVASAGAR
Realtor
416.888.7877
HomeLife/GTA Realty Inc., Brokerage
Office: 416.321.6969 Fax: 416.321.6963
www.divhomes.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

# அமெரிக்க அதிபர் தேர்தல் – 2024

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும் அமெரிக்க அதிபரின் 60ஆவது தேர்தல் நொவெம்பர் 05, 2024ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் தெரிவு செய்யப்படுபவர் அமெரிக்காவின் 47ஆவது அதிபராக ஜனவரி 20, 2025ஆம் திகதி பதவி ஏற்பார்.

அமெரிக்க மக்கள் நொவெம்பர் 05ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் தமது அதிபர் மற்றும் உப அதிபரைத் தெரிவு செய்வதுடன் அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்களையும் (House of representatives) மூன்றில் ஒரு பங்கு மேற்சபை உறுப்பினர்களையும் (Senators) தெரிவு செய்வர்.

இத்துடன் இதே தினம் அமெரிக்காவில் உள்ள 50 மாநிலம் மற்றும் 5 பிரதேசங்களில், 11 மாநிலம் மற்றும் 2 பிரதேசங்களில் மக்கள் தமது ஆளுநர்களையும் (Governors) தெரிவு செய்வர்.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களது பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களது எண்ணிக்கை 435 ஆகும். இந்த 435 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமான தேர்தலும் நொவெம்பர் 05ஆம் திகதி நடைபெறுகிறது. அமெரிக்க நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற ஒரு கட்சி குறைந்தது 218 ஆசனங்களைக் கொண்டிருக்க வேண்டும். தற்போதைய அமெரிக்க நாடாளுமன்றத்தில் குடியரசுக்கட்சி (Republican Party) 220 உறுப்பினர்களையும், ஜனநாயகக் கட்சி (Democratic Party) 212 உறுப்பினர்களையும் கொண்டிருந்தனர். 3 உறுப்பினர்களுக்கான இடம் வெற்றிடமாக இருந்தது.

அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர்களது பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும். ஆனால் இவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஒவ்வொரு தேர்தலிலும் (இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை) தெரிவு செய்யப்படுபவர். அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினர்களது எண்ணிக்கை 100 ஆகும். இதில் 34 பேர் நொவெம்பர் 05ஆம் திகதி நடைபெறும் தேர்தலில் தெரிவு செய்வர். தற்போதைய அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபையில் குடியரசுக் கட்சி 49 உறுப்பினர்களையும், ஜனநாயகக் கட்சி 47 உறுப்பினர்களையும் மற்றும் 4 உறுப்பினர்கள் சுயேட்சை உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை 100 உறுப்பினர்களில் நொவெம்பர் 05இல் நடைபெற இருக்கும் தேர்தலில் தெரிவு செய்யப்படவுள்ள 34 இடங்களில் தற்போது 19 இடங்களில் ஜனநாயகக்கட்சியும், 11 இடங்களில் குடியரசுக் கட்சியும், 4 இடங்களில் சுயேட்சை உறுப்பினர்களும் பதவி வகித்திருந்தனர்.




அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபையில் பெரும்பான்மையைப் பெற ஒரு கட்சி குறைந்தது 51 ஆசனங்களைப் பெற வேண்டும். இதனால் நொவெம்பர் 05இல் நடைபெற உள்ள மேற்சபைக்கான தேர்தலில் பெரும்பான்மையைப் பெற தேர்தல் நடைபெறும் 34 இடங்களில் குறைந்தது 13 இடங்களைக் குடியரசுக் கட்சி பெறவேண்டும். ஆனால் மேற்சபையில் பெரும்பான்மையைப் பெற குறைந்தது 23 இடங்களை ஜனநாயகக் கட்சி பெறவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க அதிபருக்கான தேர்தல் நொவெம்பர் 05ஆம் திகதி நடைபெற்றாலும் அன்று நடைபெறும் நாடு தழுவிய வாக்கெடுப்புகள் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்ய மாட்டாது. அன்று நடைபெறும் வாக்கெடுப்புகள்மூலம் அமெரிக்க மக்கள் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்யும் தெரிவாளர்களைத் (State's electors) தமது மாநிலத்தில் இருந்து தெரிவு செய்வர். இவ்வாறு ஒவ்வொரு மாநிலத்திலும் இருந்து தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களின் எண்ணிக்கையை கீழே உள்ள அட்டவணையில் பார்க்கவும். நாடு முழுவதிலும் இருந்து 538 தெரிவாளர்கள் அன்று தெரிவு செய்யப்படுவர்.

இவர்கள் டிசம்பர் 17, 2024இல் வாக்களிப்பின்மூலம் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்வர். ஆகக்குறைந்தது 270 தெரிவாளர்களது வாக்கைப் பெறுபவரே அமெரிக்க அதிபராகத் தெரிவு செய்யப்பட்டவர் என அமெரிக்க மக்கள் சபை ஜனவரி 06, 2025ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கும். தெரிவு செய்யப்பட்ட அமெரிக்க அதிபர் ஜனவரி 20, 2025ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து பதவி ஏற்பார்.

ஆனால் ஊடகங்கள் எல்லாம் நொவெம்பர் 05ஆம் திகதி அமெரிக்க மக்கள் அமெரிக்க அதிபரைத் தெரிவு செய்யும் தெரிவாளர்களைத் தமது மாநிலத்தில் தெரிவு செய்தவுடனேயே வெற்றி பெறப்போகும் அமெரிக்க அதிபரை அறிவித்து விடுவர்.

50 மாநிலங்கள் மற்றும் தலைநகர் இருக்கும் வாஷிங்டன் D.Cஉம் சேர்ந்து 51 பிரதேசங்களிலும் இருந்து தெரிவு செய்யப்படும் 538 தெரிவாளர்கள் எந்தெந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என ஊடகங்கள் முன்கூட்டியே தமது கணிப்பை வெளியிட்டு வருகின்றனர். இதில் 7 மாநிலங்களைத்தவிர ஏனைய 44 பிரதேசங்களினது முடிவுகள் இலகுவாக மதிப்பிடக்கூடியவை. அந்த 44 பிரதேசங்களும் வழக்கமாகத் தொடர்ந்து ஜனநாயகக்கட்சி அல்லது குடியரசுக் கட்சிக்கு வாக்களித்து வருகின்றன. 7 மாநிலங்கள் மட்டும் சில வேளைகளில் ஜனநாயகக் கட்சிக்கும் சில வேளைகளில் குடியரசுக் கட்சிக்கும் மாறிமாறி வாக்களிப்பன. எனவே இந்த 7 மாநிலங்கள்தான் அமெரிக்க அதிபர் யார் எனத் தீர்மானிக்கின்றன. இந்த 7 மாநிலங்களும் Arizona, Georgia, Michigan, Nevada, North Carolina, Pennsylvania மற்றும் Wisconsin ஆகும்.

தொடர்ச்சி 05ஆம் பக்கம்

NACPT
PHARMA COLLEGE
O/A North American College of Pharmaceutical Technology
CANADIAN STUDENT VISA PILOT PROGRAM
Visitor Visa மூலம் வந்துள்ள இலங்கை மாணவர்களுக்கு
DLI Institution
MORE INQUIRY:
647 998 7374
info@nacptpharmacollege.com
www.nacptpharmacollege.com
Campus Locations
Toronto: 9 - 5310 Finch Ave East, Toronto, ON M1S 5E8
Brampton: 44 Queen St E, Brampton, ON L6V 1A2

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance &
Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate
Insurance

HOMELIFE
வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc. Brokerage
5215 Finch Ave.E. #203, Toronto ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963
*Independently Owned & Operated
TRUTH BUILDS TRUST

Vlambaram - November 01 2024 New _Vlambaram-Front 2024-10-31 7:03 PM Page 2



# NEW INDUSTRIAL / OFFICE BUILDING

## *Mostly Anticipated New Project in Scarborough*

on

## 2711 Markham Road

## @ Nashdene




*For further Info :*

**Please Call : 416 321 6969**

Raja Mahendran
Broker / Owner
raja@mahendran.ca

Gulshan Sharma
Broker
gksharmaca@gmail.com

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

## MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ஆர்வம் குறைந்த போட்டி

## – அரவின் –

இரண்டு வாரங்களில் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளப்போகின்ற நிலையிலும் இலங்கையில் தேர்தல் பிரசாரங்கள் இன்னமும் சூடுபிடிக்கவில்லை.

கடுமையான போட்டி நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற இந்தத் தேர்தலில், அரசியல் கட்சிகள் முழுமுனைப்புடன் பிரசாரங்களில் இறங்கியிருக்க வேண்டும்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியைத் தவிர, ஏனைய கட்சிகள் பெரியளவிலான பிரசாரக் கூட்டங்கள் பேரணிகளை இன்னமும் நடத்த ஆரம்பிக்கவில்லை.

அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதால், தேசிய மக்கள் கட்சி உற்சாகமான நிலையில் காணப்படுகிறது. அதைவிட எப்படியாவது நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றியைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றி விடவேண்டும் என்பதில் அந்தக் கட்சி உறுதியாக இருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால், ஆட்சி அமைப்பதற்குப் பிற கட்சிகளின் தயவை நம்பி இருக்கவேண்டும் அல்லது இன்னொரு கட்சியின் அரசாங்கத்துடன் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்க இணைந்து பணியாற்ற வேண்டி இருக்கும். இந்த இரண்டுமே தேசிய மக்கள் சக்திக்கு நெருக்கடியைக் கொடுக்கும்.

அனுர குமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டாலும், அவர் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு, அவருடன் இணைந்து செயற்படக்கூடிய ஓர் அரசாங்கம் தேவை. இன்னொரு கட்சி ஆட்சி அமைக்கின்ற நிலை ஏற்படுமானால், ஜனாதிபதியாக இருந்தாலும்கூட, அனுர குமார திஸாநாயக்க தனது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போகும்.

அதுபோல, தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டால், பிற கட்சிகளை நம்பி இருக்கவேண்டிய நிலை ஏற்படும்.

கூட்டணி ஆட்சி என்றாலே கூடவே பிணக்குகளும் சேர்ந்து வரும். கூட்டணிக் கட்சிகளை திருப்திப்படுத்த வேண்டி இருக்கும். அவற்றின் விருப்பத்திற்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டியிருக்கும். அவற்றுடன் முரண்படாத வகையில் தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும்.




இப்படி சமரசம் செய்துகொள்ள வேண்டிய சூழலுக்குத் தள்ளப்படும் ஓர் அரசாங்கத்தினால், மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களைச் செயற்படுத்த முடியாது.

இதனால்தான் இந்தத் தேர்தல் தேசிய மக்கள் சக்திக்கு மிக மிக முக்கியமானது. ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுள்ள வெற்றி அவர்களுக்கு அதிக ஊக்கத்தையும் பலத்தையும் கொடுத்திருக்கிறது. அதனால் அவர்கள் பிரசாரங்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஆனால் தேசிய மக்கள் சக்தியுடன் ஒப்பீடு செய்கின்றபோது, ஏனைய கட்சிகள் ஓய்ந்துபோய் இருப்பதாகவே தெரிகிறது.

குறிப்பாக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் புதிய ஜனநாயக முன்னணியும் இன்னமும் பிரசாரங்களை தீவிரமாக ஆரம்பிக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தியைவிட இந்த இரண்டு கட்சிகளும் தங்களின் பலத்தைக் காட்டுவதற்கு பெரிதும் முயற்சிகளை முன்னெடுத்திருந்தன.

ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும், சஜித் பிரேமதாசவும், ஜனாதிபதித் தேர்தலில் தங்களின் பலத்தைக் காட்டுவதற்குப் பெரும் எடுப்பிலான கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவர்களுடன் ஒப்பீடு செய்கின்றபோது பெரிய அளவிலான கூட்டங்களை தேசிய மக்கள் சக்தி நடத்தி இருந்தாலும் பெரும் எண்ணிக்கையிலான மக்களைத் திரட்டி இருந்தாலும் இவர்களோடு ஒப்பீடு செய்கின்ற அளவிற்கு தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் செலவு செய்யவில்லை.

சஜிப் பிரேமதாசவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் பிரசாரத்துக்காக செலவிடப்பட்ட தொகை மிக மிக அதிகம்.

அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட தரவுகளின்படி சஜித் பிரேமதாச 113 கோடி ரூபாவையும், ரணில் 99 கோடி ரூபாவையும் செலவிட்டிருந்தனர்.

அனுர குமார திஸாநாயக்க 53 கோடி ரூபாவைச் செலவிட்டிருந்தார். ஆனால் அவர் தனது சொந்தக் காசைச் செலவிடவில்லை. கட்சி நிதியும், கொடைகளும் தான் அவரது செலவுகளை ஈடுசெய்தன.

ஜனாதிபதித் தேர்தலில் பெருமளவு நிதியைச் செலவிட்டுவிட்டதால், ஐக்கிய மக்கள் சக்தியும், புதிய ஜனநாயக முன்னணியும், குறுகிய காலத்துக்குள் இன்னொரு தேர்தலை எதிர்கொள்வதற்கான பொருளாதார பலத்தைக் கொடுக்கவில்லை.

அடுத்தடுத்து மில்லியன் கணக்கான ரூபாய்களை தேர்தல் பிரசாரங்களுக்கு கொட்டுவது என்பது சாதாரணமான விடயம் அல்ல.

இவ்வாறான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு பெரும்பாலும் வர்த்தக நிறுவனங்கள் பணத்தை வாரி இறைத்தாலும் அவர்களுக்கும் ஓர் எல்லை உள்ளது என்பதை மறுக்க முடியாது.

இதன்காரணமாக இந்த இரண்டு கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் செய்ததைப் போன்று பிரம்மாண்டமான கூட்டங்களை ஏற்பாடு செய்யவில்லை. சிறிய மற்றும் ஓரளவு நடுத்தர கூட்டங்களை மாத்திரம் நடத்தத் தொடங்கியிருக்கின்றன.

மாரிகாலம் என்பதால் காலநிலையும்கூட கட்சிகளின் தேர்தல் பிரசாரங்களுக்குக் கைகொடுப்பதாக இல்லை.

இன்னமும் தேர்தலுக்கு இரண்டு வாரங்கள்தான் இருக்கின்ற சூழலில் பிரசாரம் சூடுபிடிக்காமல் இருப்பது தேர்தல்மீது அல்லது தங்களின் வெற்றியின்மீதான நம்பிக்கை பல கட்சிகளுக்குப் போய்விட்டதோ என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்துகிறது.

தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றி அதற்குப் பின்னர் நாட்டில் காணப்படுகின்ற மாற்றம் தொடர்பான எதிர்பார்ப்புகள் எல்லாமே ஏனைய கட்சிகளை சோர்வடையச் செய்திருக்கின்றன.

நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியே வெற்றி பெற்று விடும் என்று பல கட்சிகள் வெளிப்படையாகவே கூறுகின்றன.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்று கூறியும் வாக்கு சேகரிக்கின்றன. இது ஏனைய கட்சிகள் மத்தியில் இருக்கின்ற சோர்வையும் ஆர்வமின்மையையும் காட்டுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாச தேர்தல் பிரச்சாரத்தின் போது தாங்கள் ஆட்சியமைத்தால் ஜனாதிபதி அனுர குமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்படுவோம் என்று மக்களை நம்பவைக்க முற்படுகிறார்.

இது மாற்ற அலையில் மக்கள் சிக்கிக் கொண்டு விடுவார்களோ என்ற பயம் அவருக்குள் இருப்பதைக் காட்டுகிறது.

குதிரையைக் கொடுத்துவிட்டு கடிவாளத்தை இன்னொருவரிடம் கொடுப்பது எந்த அளவுக்குத் தவறானதோ அதுபோலத் தான் ஜனாதிபதியாக அனுர குமார திஸாநாயக்கவை தெரிவு செய்துவிட்டு அவருடன் ஒத்துழைக்கக்கூடிய நாடாளுமன்றம் ஒன்றைத் தெரிவு செய்யாமல் போனால் பயனில்லை என்ற ரீதியாக அந்தக் கட்சி பரவலான பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது.

ஜனாதிபதியாக அனுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் பிரதமராக சஜித் பிரேமதாச தெரிவு செய்யப்படுவாரேயானால் இரண்டு பேரும் முட்டி மோதிக் கொள்வர். அரசாங்கம் குழப்பமடையும் என்ற சிந்தனை பலருக்கு இருக்கிறது.

அவ்வாறான சந்தேகம் தேசிய மக்கள் சக்திக்குப் பாதகமானதாக அமையக்கூடும் என்பதால்தான், சஜித் பிரேமதாச தாம் ஆட்சிக்கு வந்தால் அனுர குமார திஸாநாயக்கவுடன் இணைந்து செயற்படுவோம் என்று கூறியிருக்கிறார்.

மக்கள் மத்தியில் சஜித் பிரேமதாச தனது செல்வாக்கைக் கொண்டு செல்வதில் சவாலை எதிர்கொள்கிறார் என்பதையும் இது வெளிப்படுத்துகிறது.

சிலிண்டர் கூட்டணியைப் பொறுத்தவரையில் ஜனாதிபதித் தேர்தலுடன் அதன் மாயை உடைந்துவிட்டது. ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருக்கிறாரா இல்லையா என்றே தெரியவில்லை.

அவர் ஓர் உறங்கும் பங்காளன்போல இருந்துகொண்டு, அவ்வப்போது பின்னால் இருந்து ஆட்டுவிக்கப் பார்க்கிறார்.

அவருக்குப் பின்னால் ஓடிவந்தோர் பலர் இந்தத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கிக்கொண்டிருப்பதும் தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடிக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம்.

குறிப்பாக ஜனாதிபதித் தேர்தலுடன் பல முக்கியமான மூத்த அரசியல் தலைவர்கள் இனித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்றும் தீர்மானித்து விட்டனர்.

ராஜபக்ச சகோதரர்களில் யாரும் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. நாமல் ராஜபக்சகூட தேசியப் பட்டியலில்தான் போட்டியில் நிறுத்தப்பட்டிருக்கிறார். ஷசீந்திர ராஜபக்ஷ மாத்திரம் மொனராகல மாவட்டத்தில் போட்டியில் இறங்கி இருக்கிறார்.

ராஜபக்ச குடும்பம் கிட்டத்தட்ட போட்டியில் இருந்து ஒதுங்கிக்கொண்டதும், பொதுஜன பெரமுன சார்பில் அதிகம் பிரபலம் இல்லாதவர்கள் போட்டியில் நிறுத்தப்பட்டிருப்பதுகூட இந்தத் தேர்தல் இன்னமும் களைகட்டாமல் இருப்பதற்கு ஒரு காரணம்.

பிரசாரங்கள் களைகட்டாமல் இருப்பதால் வாக்களிப்புவீதம் குறைவடையும் சாத்தியமும் உள்ளது.

விளம்பரம்
VLAMBARAM™

34ஆவது ஆண்டில்

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# அமெரிக்க.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

44 பிரதேசங்களில் தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களில் 226 பேர் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அதிபர் வேட்பாளருக்கும் 219 பேர் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அதிபர் வேட்பாளருக்கும் வாக்களிப்பது வழமை. மற்றைய 7 மாநிலங்களிலும் தெரிவாகும் 93 தெரிவாளர்களின் முடிவில்தான் அமெரிக்க அதிபர் தெரிவு தங்கியுள்ளது. இவர்களில் குறைந்தது 44 தெரிவாளர்களின் ஆதரவைப் பெற்றால் Kamala Harrisஉம் குறைந்தது 51 தெரிவாளர்களின் ஆதரவைப் பெற்றால் Donald Trumpஉம் அமெரிக்க அதிபர் பதவியைப் பெறுவதற்கு வாய்ப்பு உள்ளது.

| No. | Jurisdiction | Electoral Votes |
|---|---|---|
| 1 | Alabama | 9 |
| 2 | Alaska | 3 |
| 3 | Arizona | 11 |
| 4 | Arkansas | 6 |
| 5 | California | 54 |
| 6 | Colorado | 10 |
| 7 | Connecticut | 7 |
| 8 | Delaware | 3 |
| 9 | District of Columbia | 3 |
| 10 | Florida | 30 |
| 11 | Georgia | 16 |
| 12 | Hawaii | 4 |
| 13 | Idaho | 4 |
| 14 | Illinois | 19 |
| 15 | Indiana | 11 |
| 16 | Iowa | 6 |
| 17 | Kansas | 6 |
| 18 | Kentucky | 8 |
| 19 | Louisiana | 8 |
| 20 | Maine | 4 |
| 21 | Maryland | 10 |
| 22 | Massachusetts | 11 |
| 23 | Michigan | 15 |
| 24 | Minnesota | 10 |
| 25 | Mississippi | 6 |
| 26 | Missouri | 10 |
| 27 | Montana | 4 |
| 28 | Nebraska | 5 |
| 29 | Nevada | 6 |
| 30 | New Hampshire | 4 |
| 31 | New Jersey | 14 |
| 32 | New Mexico | 5 |
| 33 | New York | 28 |
| 34 | North Carolina | 16 |
| 35 | North Dakota | 3 |
| 36 | Ohio | 17 |
| 37 | Oklahoma | 7 |
| 38 | Oregon | 8 |
| 39 | Pennsylvania | 19 |
| 40 | Rhode Island | 4 |
| 41 | South Carolina | 9 |
| 42 | South Dakota | 3 |
| 43 | Tennessee | 11 |
| 44 | Texas | 40 |
| 45 | Utah | 6 |
| 46 | Vermont | 3 |
| 47 | Virginia | 13 |
| 48 | Washington | 12 |
| 49 | West Virginia | 4 |
| 50 | Wisconsin | 10 |
| 51 | Wyoming | 3 |
| | Total | 538 |

அமெரிக்க அதிபர் தேர்தலுக்குப் போட்டியிடுவதற்குப் பலர் முன்வந்திருந்தாலும் இறுதியில் ஏழு பேரே தற்போது போட்டியிடுகின்றனர்.

Donald Trump – Republican Party
Kamala Harris – Democratic Party
Jill Stein - Green Party
Chase Oliver - Libertarian Party
Claudia De La Cruz – Socialism and Liberation Party
Rendall Terry - Constitution Party
Cornel West - Independent

## டொனால்ட் டிரம்ப் (Donald Trump)

இவர் அமெரிக்காவின் 45ஆவது அதிபராக 2017ஆம் ஆண்டில் இருந்து 2020ஆம் ஆண்டுவரை பதவி வகித்தவர். 78 வயதான Donald Trump அமெரிக்காவில் New York நகரில் Queens என்னும் இடத்தில் ஜூன் 14, 1946ஆம் திகதி பிறந்தவர். பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் இளங்கலைமானிப் பட்டத்தை Donald Trump 1968ஆம் ஆண்டில் பெற்றார். அவர் 2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் முன்னர் ஒரு Real Estate Developerஆகவும், தொழிலதிபராகவும் தொலைக்காட்சி நிறுவனத்தை நடத்துபவராகவும் பணிபுரிந்தார். இவருக்கு இருமுறை திருமணமாகி மணவிலக்குப் பெற்றதுடன் நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். 2005ஆம் ஆண்டில் Melania Knaussஐ திருமணம் செய்து அவர்களுக்கு ஒரு மகனும் இருக்கிறார்.



Donald Trump and JD Vance

Donald Trumpஇன் கொள்கைகளில் முதன்மையானது தனிநபர் வருமானவரிக் குறைப்பும் பொருளாதார வளத்தைப் பெருக்குவதுமாகும். அமெரிக்க வரலாற்றிலேயே பெரிய வரிக்குறைப்பைச் செய்யப் போவதாகக் கூறுகிறார். அமெரிக்காவில் தங்கள் தயாரிப்புகளை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கான வரியை 21%இல் இருந்து 15%ஆகக் குறைக்கப் போவதாகவும் கூறுகிறார். அமெரிக்க எல்லைகளைப் பாதுகாக்க அதிக கவனம் எடுக்கப் போவதாகவும் அதனூடாக வரும் குடிவரவாளர்களுக்கு எதிராக கடுமையான சட்டமூலங்களை அமல்படுத்தப்போவதாகவும் கூறும் Donald Trump போதைப் பொருள் கடத்தல்காரர் மீதும் மனிதர்களைக் கடத்துவோர் மீதும் அவர்களது கொடூரமான செயல்களுக்கு மரண தண்டனையை உறுதிப்படுத்த அமெரிக்க நாடாளுமன்றத்தை வலியுறுத்தப் போவதாகவும் கூறுகிறார்.

Donald Trump தன்னுடைய உப அதிபர் தெரிவாக Ohio மாநிலத்திலிருந்து தெரிவான அமெரிக்க நாடாளுமன்ற மேற்சபை உறுப்பினரான JD Vanceஐ நியமித்துள்ளார். Ohio மாநிலத்தில் Middletownஇல் 1984 ஒகஸ்ற் 02இல் பிறந்த இவர் தனது பெற்றோரின் விவாகமுறிவிற்குப் பின்னர் தாயாருடன் வளர்ந்தார். தனது குழந்தைப்பருவம் வறுமையும், துஷ்பிரயோகத்தாலும் கடந்தது எனவும் தனது தாயார் போதைப் பொருளுக்கு அடிமையானதால் தாத்தா பாட்டியுடன் வளர்ந்ததாக தன்னைப்பற்றி JD Vance குறிப்பிட்டுள்ளார். இவர் எழுதிய "Hillbilly Elegy" என்னும் இவரது வாழ்க்கை வரலாறு மிகவும் பிரபல்யமாக விற்பனையான புத்தகமாகும். இப்புத்தகம் 2020இல் திரைப்படமாகவும் வெளியானது. Ohio மாநில பல்கலைக் கழகத்திலும் பின்னர் Yale சட்டக்கல்லூரியிலும் சட்டத்துறையில் பட்டம் பெற்று சட்டத்தரணியாகப் பணியாற்றினார். இவர் 2022ஆம் ஆண்டிலிருந்து Ohio மாநிலத்தின் அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேற்சபை உறுப்பினராக இருக்கிறார்.

JD Vance 2014ஆம் ஆண்டில் தன்னுடன் Yale சட்டக்கல்லூரியில் கல்வி பயின்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சட்டத்தரணியான Usha Chilukuriயைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கின்றனர்.

## கமலா ஹாரிஸ் (Kamala Harris)

இவர் அமெரிக்காவின் தற்போதைய 49ஆவது உபஅதிபராகப் பதவி வகிக்கிறார். அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட இருந்த தற்போதைய அதிபர் Joe Biden போட்டியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து ஜூலை 21ஆம் திகதி Kamala Harris தான் அதிபர் பதவிக்கு போட்டியிடப் போவதாகக் கூறினார். Kamala Harris அமெரிக்க அதிபர் பதவிக்கு முக்கியமான அமெரிக்கக் கட்சி ஒன்றின் சார்பில் போட்டியிடத் தெரிவான முதலாவது கறுப்பினத்தைச் சேர்ந்த பெண்மணியும் ஆசிய வம்சாவளிப் பெண்ணும் ஆவார்.

Kamala Harris அமெரிக்காவில் Californiaஇல் Oaklandஇல் ஒக்ரோபர் 20, 1964இல் பிறந்தவர். இவரது தாயார் இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபுகுந்தவர். இவரது தந்தையார் ஜமேக்காவிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபுகுந்தவர். Howard பல்கலைக் கழகத்திலும் பின்னர் Hastings சட்டக்கல்லூரியிலும் சட்டத் துறையில் பட்டம் பெற்று சட்டத்தரணியாகப் பணியாற்றினார். 2016ஆம் ஆண்டில் California மாநிலத்தின் அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேற்சபை உறுப்பினராக Kamala Harris தெரிவானார். 2020இல் Joe Biden அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடத் தெரிவானபோது அவர் Kamala Harrisஐ தனது உப அதிபர் தெரிவாகத் தேர்வு செய்தார். ஜனவரி 20, 2021இல் உப அதிபராக Kamala Harris பதவியேற்றார். இவர் அமெரிக்காவின் முதலாவது பெண் உப அதிபர். அத்துடன் முதலாவது உப அதிபராகப் பதவியேற்ற ஆபிரிக்க அமெரிக்கரும், ஆசிய அமெரிக்கரும் ஆவார்.

Kamala Harris 2014ஆம் ஆண்டில் Doug Emhoff என்பவரைத் திருமணம் செய்தார். அவர் Doug Emhoffஇனுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் தாயாக இருக்கிறார்.



Kamala Harris and Tim Walz

Kamala Harrisஇனுடைய கொள்கையில் முதன்மையானது பெண்ணுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கருக்கலைப்புக்கான சட்ட பூர்வ உரிமை இருக்க வேண்டும் என்பதும், காலநிலை மாற்றம் குறைப்பும் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும் ஆகும். அமெரிக்க எல்லைக் காவல் முகவர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அமெரிக்க எல்லையை பலப்படுத்தப் போவதாகவும் கூறும் Kamala Harris தனது நிர்வாகத்தில் நோயாளர்களுக்கான மருந்துச் செலவுகள் குறைக்கப்படும் என்றும் கூறுகிறார். தேவை உள்ள எல்லா அமெரிக்கர்களுக்கும் இன்சுலின் மருந்து மாதாந்தம் $35இற்குக் கிடைக்கும் வசதியை அமெரிக்காவில் இன்சுலின் மருந்து உற்பத்தி செய்யும் நிறுவனங்களிடமிருந்து செய்து கொடுக்கப் போவதாகக் கூறுகிறார். அத்துடன் தனது முதலாவது பதவிக்காலம் முடிவடைய முன்னர் 3 மில்லியன் புதிய வீடுகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கு மலிவு விலையில் வாடகைக் குடியிருப்புகளைக் கட்டி அமெரிக்காவின் வீட்டுப் பற்றாக் குறையை முடிவுக்குக் கொண்டு வருவேன் என உறுதியளித்துள்ளார்.

Kamala Harris தன்னுடைய உப அதிபர் தெரிவாக Minnesota மாநில ஆளுநராக இரண்டாவது முறையாகப் பதவி வகிக்கும் Tim Walzஐ நியமித்துள்ளார். இவர் ஆளுநர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட முன்னர் உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியராகவும் கால்பந்துப் பயிற்சியாளராக இருந்தவர்.

Tim Walz அமெரிக்காவில் Nebraska மாநிலத்தில் உள்ள West Pointஇல் 1964 ஏப்ரல் 06, 1964இல் பிறந்தவர். இவர் தனது உயர்நிலைப் பாடசாலைக் கல்வி முடிந்ததும் அமெரிக்க இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். Tim Walz 1989இல் Chadron மாநிலக் கல்லூரியில் சமூக விஞ்ஞானக் கல்வியில் இளங்கலை விஞ்ஞானமானிப் பட்டம் பெற்றவர். இராணுவ காவல் அதிகாரியாக 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய பின்னர் Minnesotaஇல் இருந்து அமெரிக்க நாடாளுமன்றத்திற்கு உறுப்பினராக ஐந்து முறை தெரிவு செய்யப்பட்டார். 2018ஆம் ஆண்டிலும் அதன்பின்னர் 2022இலுமாக Tim Walz இரண்டுமுறை Minnesota மாநில ஆளுநராகத் தெரிவு செய்யப்பட்டார்.

Tim Walz 1994ஆம் ஆண்டு பொதுப் பாடசாலை நிர்வாகியாகப் பணியாற்றிய Gwen Whipple என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் இருக்கின்றனர்.

Vlambaram - November 01 2024 New _Vlambaram-Front  2024-10-31  7:03 PM  Page 6



# சோதனைமிக்க தேர்தல்

## – முகிலன் –

இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலுக்கு இன்னமும் இரண்டு வாரங்களே இருக்கின்ற நிலையில் தமிழ் வாக்காளர்கள் குழப்பமடைந்து போயிருக்கின்றனர்.

இந்தமுறை யாருக்கு வாக்களிப்பது? இது வடக்குக் கிழக்கில் உள்ள பெரும்பாலான வாக்காளர்கள் மத்தியில் இருக்கின்ற முக்கியமான ஒரு கேள்வியாக இருக்கிறது. தேர்தல் வரும்போது, சாதாரண வாக்காளர்கள் மத்தியிலும் இத்தகைய கேள்வி எழும்புவது வழக்கம்தான்.

மரபுரீதியாக குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிக்கின்ற வாக்காளர்களுக்கு இவ்வாறான குழப்பம் இருப்பதில்லை.

அவர்கள் காலம் காலமாக ஒரு கட்சிக்கு வாக்களித்துப் பழகிவிட்டனர். அவர்கள் ஒருபோதும் இன்னொரு கட்சிக்கு வாக்களிக்கமாட்டார்கள்.

தாங்கள் விரும்புகின்ற கட்சி யாரை வேட்பாளராக நிறுத்துகிறதோ, அவருக்கு வாக்களித்துவிட்டுப் போவார்கள். இதனை கட்சிக்கான வாக்கு வங்கி என்று சொல்லலாம். ஒவ்வொரு கட்சிக்கும் இப்படியான வாக்கு வங்கி இருக்கும்.

கட்சியின் அளவு, செயல்திறன், கவர்ச்சி, தலைமைத்துவம் போன்ற காரணங்களால் அந்த வாக்கு வங்கி மாறுபாடானதாக இருக்கும்.

அதேவேளை, தேர்தலின்போது வேட்பாளரைப் பார்த்து அவர் முன்வைக்கும் திட்டங்களைப் பார்த்து, அல்லது கட்சிகளின் கொள்கைகளைப் பார்த்து, வாக்களிப்பதுபற்றித் தீர்மானிக்கின்ற வாக்காளர்களும் இருக்கின்றனர்.

இவர்கள் மிகத் தெளிவானவர்கள். எப்போது எந்தப் பக்கம் சாய்வார்களென்று கூறமுடியாது. இவர்களை மிதக்கும் வாக்காளர்கள் என்றும் குறிப்பிடலாம்.

இவர்கள்தான் திருப்பங்களை ஏற்படுத்தக் கூடியவர்கள்.

இந்த இரண்டு வகையான தமிழ் வாக்காளர்களுக்குமே, யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பம் ஏற்பட்டிருப்பதுதான் ஆச்சரியமானது.

இதற்குக் காரணம், தேசிய அரசியல் பரப்பில் ஏற்பட்டிருக்கின்ற பிளவுகள், பிரச்சினைகள்தான்.

வடக்குக் கிழக்கில் நீண்டகாலமாகவே தமக்கென வாக்கு வங்கியைக் கொண்டிருந்த இரண்டு கட்சிகள் இருந்தன. ஒன்று - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ். ஜி.ஜி.பொன்னம்பலத்தினால் உருவாக்கப்பட்ட சைக்கிள் சின்னத்தைக் கொண்ட கட்சி இது. இப்போது அவரது பேரன் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையில் அதே பெயர் அதே சின்னத்துடன் இயங்குகிறது.

இன்னொன்று - இலங்கை தமிழ் அரசுக் கட்சி. தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சி, வீடு சின்னத்தைக் கொண்டிருக்கிறது.



சிலகாலமாக உதயசூரியன் சின்னத்துக்குள் இருந்த இந்தக் கட்சி, 2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் வீடு சின்னத்தில் போட்டியிட்டு வருகிறது.

பாரம்பரியமாக வாக்கு வங்கிகளைக் கொண்டிருந்த இந்த இரண்டு கட்சிகளும், 2001ஆம் ஆண்டு தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஐக்கியமாகின. அந்தக் கூட்டமைப்பில் ஈபிஆர்எல்எவ், ரெலோ போன்ற கட்சிகளும் இணைந்தபோது, அதன் வாக்கு வங்கி இன்னும் வலுவானதாக மாறியது.

அதன்மூலம், 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மாவட்டரீதியாக 20 ஆசனங்களும், இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களுமாக, மொத்தம் 22 ஆசனங்களுடன் நாடாளுமன்றத்தில் வலுவான தரப்பாக மாறியது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொஞ்சம் கொஞ்சமாக உடைந்து இப்போது இல்லாமல் போய்விட்டது.

இந்நிலையில், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுகிறது.

அந்தக் கட்சியின் வாக்கு வங்கி மணிவண்ணன் அணியின் வெளியேற்றத்துடன் சற்று ஆட்டம் கண்டது.

கடந்த பொதுத்தேர்தலின்போது, மணிவண்ணன் அணி கடுமையாகப் பணி ஆற்றியதன்மூலமே, தமிழ்க் காங்கிரசுக்கு தேசியப்பட்டியல் ஆசனம் உள்ளிட்ட இரண்டு ஆசனங்கள் கிடைத்தன.

இந்த முறை அவர்கள் உடைந்து சி.வி.விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியில் போட்டியிடுகின்றனர்.

பாரம்பரிய வாக்கு வங்கியைக்கொண்ட மற்றொரு கட்சியான தமிழரசுக் கட்சியும் இந்த முறை உடைந்து விட்டது.

அந்தக் கட்சியில், அதிருப்தி அடைந்த ஒரு தரப்பினர் மாம்பழம் சின்னத்தில், சட்டத்தரணி தவராசா தலைமையில் சுயேட்சைக்குழுவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடுகின்றனர்.

அந்தக் குழுவில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், வடமாகாண சபை முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் உள்ளிட்ட பிரபலங்களும் இருக்கின்றனர். மற்றொரு தரப்பான, சசிகலா ரவிராஜ், உதயகுமார் போன்றோர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் போட்டியிடுகின்றனர்.

மிதிலைச்செல்வி, உமாகரன் ராசையா போன்றோர், தமிழ் மக்கள் கூட்டணியின் பட்டியலில் இடம்பெற்றிருக்கின்றனர்.

ஆக தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கி, ஏதோ ஒரு வகையில் குறைந்தபட்சம் நான்கு துண்டுகளாக உடைந்திருக்கிறது. இந்தக் கட்சிகளைப் போலவே யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலையான வாக்கு வங்கியைக் கொண்டிருக்கின்ற இன்னொரு கட்சி ஈபிடிபி. டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான இந்தக் கட்சி 1994ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக குறைந்தபட்சம் ஓர் ஆசனத்தைத் தக்க வைத்து வந்திருக்கிறது.

அவ்வாறான ஒரு நிலையான வாக்கு வங்கியை உருவாக்குவதற்கு, கடந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்ற அங்கஜன் இராமநாதன் கடும் முயற்சி எடுத்திருந்தார்.

இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பு, சலுகைகள் போன்றவற்றைக் காண்பித்து பிரதேச மட்டத்தில் குழுக்களை உருவாக்கி, அவர் தனக்கான ஓர் அரசியல் கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறார். இவரது வாக்கு வங்கியையும் குறைத்து மதிப்பிட முடியாது.

இதுவரை தமக்கென வாக்கு வங்கி ஒன்றை தேர்தல்மூலம் உறுதிப்படுத்தாத ஒரு தரப்பு இருக்கிறது. சங்குக் கூட்டணி என இப்போது அழைக்கப்படுகின்ற ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியே அது.

ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி என ஐந்து கட்சிகள் இந்த அணியில் இருக்கின்றன.

இவர்கள் முதன்முறையாக, தேர்தலைச் சந்திக்கப் போகின்றனர். இவர்களுக்கான ஆதரவு எப்படி இருக்கிறது. வாக்கு வங்கி ஒன்று இருக்கிறதா? என்பன போன்ற உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்களை தேர்தலுக்குப் பின்னர்தான் தெரிந்து கொள்ள முடியும்.

கடந்தமுறை ஓர் ஆசனத்தைப் பெற்ற, சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணி இந்தத் தேர்தல் களத்தில் தனியாக நிற்கிறது.

இம்முறை சி.வி.விக்னேஸ்வரன் போட்டியிடாத நிலையில், மணிவண்ணன் அணி ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால், ஆசனம் ஒன்றைப் பெறக்கூடிய வாக்குக் கவர்ச்சி இதற்கு உள்ளதா என்ற கேள்வி இருக்கிறது.

இந்தக் கட்சிகள், கூட்டணிகள் தவிர இந்தமுறை தேர்தலில். அதிக எண்ணிக்கையான சுயேட்சைக்குழுக்கள் வடக்கிலும் கிழக்கிலும் போட்டியிடுகின்றன.

அவ்வாறு போட்டியிடுகின்ற சுயேட்சைக் குழுக்களில் பெரும்பாலானவை, தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டவை. தமிழ்த் தேசிய கட்சிகளுக்காகப் பணியாற்றியவர்களைக் கொண்டவை.

தமிழ் தேசிய நிலைப்பாட்டில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டவர்கள்தான், பல சுயேட்சை குழுக்களாக சிதறிப் போய் போட்டியிடுகின்றனர்.

இதனால், பாரம்பரியமாக, தமிழ்த் தேசிய சிந்தனையுடன் வாக்களிக்கும் மக்கள் யாருக்கு வாக்களிப்பதெனத் தெரியாமல் குழப்பமடைந்திருக்கின்றனர்.

யாருக்கு வாக்களிக்கப் போகிறீர்கள் என கேள்வி எழுப்பினால், அவர்களால் உடனடியாகப் பதிலளிக்க முடியாதநிலை இருக்கிறது.

அவர்கள் நம்பிய கட்சி காலை வாரி இருக்கிறது. ஏமாற்றி இருக்கிறது. அவர்கள் நம்பிய தலைவர்கள் ஏமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர்.

அவர்கள் விரும்பிய தலைவர்கள் அல்லது வேட்பாளர்கள் விரும்பாத கட்சியுடன் இணைந்திருக்கின்றனர். விரும்பாதவர்களுடன் இணைந்து போட்டியிடுகின்றனர்.

இப்படி விருப்பு வெறுப்புகளுக்கு மத்தியில், வாக்களிக்கப் பொருத்தமான சின்னம் ஒன்றையும், மூன்று வேட்பாளர்களையும், தேர்வு செய்வது அவர்களுக்கு மிகக் கடினமான காரியமாக இருக்கிறது.

அதிகளவிலான கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் வாக்குச்சீட்டை நிரப்பும்போது, விரும்பிய சின்னத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு சிரமப்பட வேண்டிய நிலையும் வாக்காளர்களுக்கு இருக்கிறது.

* இந்தச் சிக்கல்களைத் தாண்டி அவர்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள்?
* பாரம்பரியத்தைத் தொடரப் போகிறார்களா? அல்லது மாற்றத்தை விரும்பப் போகின்றனரா?
* முற்போக்கு சிந்தனையுடன் தமிழ் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக வாக்களிக்க போகிறார்களா?
* அல்லது சிதறிப்போய் இருக்கும் சுயேட்சைக் குழுக்களுக்கு வாக்களித்து பலவீனத்தை வெளிப்படுத்தப் போகிறார்களா?

எல்லாமே கேள்விக்குறியாக இருக்கிறது..

தமிழ் தேசிய வாக்குகள் முன்னொரு போதும் இல்லாமல் சிதைந்துபோன ஒரு தேர்தலாக இது அமையப் போகிறது.

தமிழ் அரசியல்வாதிகளுக்கு இது எப்படியோ, தமிழ் வாக்காளர்களுக்கு இது சோதனைமிக்கது என்பதில் சந்தேகம் இல்லை.

# தமிழரின் வாழ்விடங்களும், கல்வியும்



பேராசிரியர்
மா. சின்னத்தம்பி

## கடந்த இதழ் தொடர்ச்சி...

### 1.2 கொழும்புத் தமிழர் கல்வி

இலங்கையின் தலைநகரம் கொழும்பு முக்கியத்துவம் பெற்றது. துறைமுகமாக வும், பெருவணிக நகராகவும் வளர்ச்சி பெற்றது. முதன்மையான சுற்றுலா மையமாகவும், கல்விப் பெருநகராகவும் அது விளங்குகிறது.

கறுவாக்காட்டை மையப்படுத்திய மேட்டுக் குடியினரின் ஆடம்பர வதிவிடமாகவும் கொழும்பு வளர்ந்துள்ளது.

புதிய நாடாளுமன்றம் ஸ்ரீஜெயவர்த்தன புரவுக்கு மாற்றப்படும்வரை நாடாளுமன்ற அரசியலின் தலைமை நகரமாகவும் விளங்கி வந்தது. இன்றும் திறைசேரி உட்பட பல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் கம்பனிகளின் தலைமை அலுவலகங்களும் இங்கு குவிந்துள்ளன.

இலங்கையின் தொழில்வாய்ப்பு விரிவாக் கத்துக்குரிய ஏராளமான வாய்ப்புகள் தொடர்ந்து விரிவடைவதால் இங்கு போக்குவரத்து உட்கட்டமைப்பு வளர்ச்சி யும், தொகுப்பு வீடுகளின் அசாதாரண பெருக்கமும் ஏற்பட்டுள்ளன.

வெளிநாட்டு தூதராலயங்களும், சர்வதேச நிறுவன தலைமை அலுவலகங்களும் ஒரு பெரிய வலைப்பின்னலை உருவாக்க செயல்படுகின்றன. இவை கல்வி கற்கும் சூழலை வலிமைப்படுத்தி வருகின்றன.

பன்மொழி, பல்சமய, பல்பண்பாட்டுக் குடித்தொகை கொழும்பு நகரின் சிறப்பான விடயமாகும்.

சிங்களவரும், தமிழரும், அரபிய இஸ்லா மியரும், இந்திய வம்சாவளியினரும் இங்கு அரச தொழில்கள், வியாபாரம், தனியார் நிறுவன தொழில்கள் என்ப வற்றை மையப்படுத்தி வளர்த்துள்ளனர், வாழ்கின்றனர்.

கல்வித்துறை சார்ந்த பல சிறப்புமிக்க மிகை வளர்ச்சி கொழும்பு நகரில் குறிப்பிடத்தக்கதாகும். அவை

1. இலங்கையிலுள்ள 17 அரச பல்கலைக் கழகங்களில் மிகவும் பழமையானதும், முதலாவதும், பெரியதுமான கொழும்பு பல்கலைக்கழகம் செயற்படுதல்.
* இது 1921இல் ஆரம்பிக்கப்பட்டது.
* முதலாவது மருத்துவக்கல்லூரியும் இது வாகும்.
* 10,000இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
* பல வளாகங்கள் இணைந்து செயற்படுகின்றன.



2. இலங்கையின் முதலாவது தொழில் நுட்பக் கல்லூரி மருதானையில் உருவாக் கப்பட்டது. இன்றும் அதே பெருமையுடன் இயங்குகிறது.



3. உயர்கல்வி பெறுவதற்காக கொழும்பு வாழ் செல்வந்தர்கள் இந்தியா, பிரித்தா னியா, முன்னைய ரஷ்யா, கனடா போன்ற பல நாடுகளுக்கும் பயணம் செய்யும் பண்பாடு கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

4. 168,000 மாணவர்கள் பல்கலைக்கழகத் துக்கு விண்ணப்பிக்கின்ற இலங்கையில் 32,000 பேருக்கு மாத்திரமே அரச பல்கலைக்கழகங்களில் இலவச உயர் கல்வி பெறுவதற்கு வாய்ப்புக் கிட்டுகிறது. இதனால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங் களுக்குச் சென்று சொந்தச் செலவில் பட்டம் பெறுவதற்குத் தூண்டுதல் அளிக்கும் பல தொழில்முறை முகவர்கள் செயல்படுகின்றனர்.

தலைநகரில் மிகப் பெரிய விளம்பரப் பதாகைகள் பல பிரதான வீதிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (Randy Boyagoda 2024:08)

"இலங்கையில் தொடங்குங்கள். அவுஸ்திரேலியாவில் படிப்பைப் பூர்த்தி செய்யுங்கள்"

"பிரித்தானியாவில் பட்டம் பெறும் தங்கள் கனவு நிறைவேறும். மாதம் பணம் செலுத்தத் தயாராகுங்கள்" இவை அத்தகைய விளம்பர வாசகங்களில் சிலவாகும். இதனால் தொடர்புடைய பலமொழி கற்பிக்கும் நிறுவனங்கள் வளர்ந்துவிட்டன.

பல்வேறு சர்வதேச பல்கலைக்கழகக் கருத்தரங்குகளும், கண்காட்சிகளும், வழிகாட்டல் அமர்வுகளும் அதிகளவில் நிகழ்த்தப்படுகின்றன.

உயர்கல்வி மற்றும் குடியுரிமை பெறுவதற்கு உதவுகின்ற புலம்பெயர் ஆங்கிலத்தகைமைகள் (TOEFL, IELTS, GAT) பலவற்றுக்குரிய பயிற்சி வகுப்புக் களும், பரீட்சைகளும் பல சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் தூதராலயங் களின் உதவியுடன் அதிகளவில் நிகழ்கின்றன.

5. வரலாற்றுப் பெருமைமிக்க அரச குடும்பத்தவர் கற்பதற்காகத் தாபிக்கப்பட்ட றோயல் கல்லூரி (Royal College) பெரிய பாடசாலையாக இயங்கி வருகிறது. மூன்று மொழிகளிலும் போதனை நிகழும். இங்குள்ள மொத்த மாணவர் தொகை வடமாகாணத்தின் பல கல்வி வலயங்களின் கூட்டு மொத்த மாணவர் தொகையை விடவும் அதிகமாகும். பெரும்பாலான மந்திரிகள் இங்கு பழைய மாணவர்கள்; பல ஜனாதிபதிகளும் இங்கே கல்வி பெற்றவர்கள்.



முதலாவது தொழிற் பாடசாலை இன்றும் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கும் றோயல் கல்லூரிக்கும் இடையில் பெரிய கல்லூரியாக இயங்குகிறது. இதுவே தேஸ்றன் கல்லூரியாகும்.




இலங்கையில் இயங்கும் முதலாவது இடத்தில் செயற்பட்டுவரும் பெண்கள் உயர்தரப் பாடசாலையான விசாகா மகளிர் கல்லூரியும் கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு அருகில் இயங்குகிறது.

பிரித்தானியர் காலத்தில் சமய-கல்வி மறுமலர்ச்சி இயக்கம் பலமானதாக



வளர்ச்சி பெற்றது. ஆங்கில மொழி வழியாகக் கற்பதை ஏற்றுக் கொண்டாலும் அதற்காக கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதையோ, கிறிஸ்தவ பண்பாடு பாடசாலைக் கல்வி முறைமையுடன் இணைந்து சுதேசிய பிள்ளைகள் கல்வி பெறுவதையோ சமூக சீர்திருத்த சிந்தனை கொண்ட சுதேசிய மதத்தலைவர்கள் விரும்பவில்லை. ஆறுமுக நாவலர், அநகாரிய தர்மபாலா, சின்ன லெப்பை போன்ற பலரும் சமூக விழிப்புணர்வைத் தூண்டிவிட்டு, தத்தமது சுதேசிய சமய பண்பாட்டுச் சூழலில் கல்வி கற்பதற்குத் துணை செய்யும் பல பாடசாலைகளை நாடு முழுவதும் உருவாக்கினர். இவற்றில் பல கொழும்புப் பிரதேசத்தில் அதிக வளர்ச்சி பெற்றிருந்தன.

இஸ்லாமிய பண்பாட்டு அக்கறையுடன் இஸ்லாமியத் தலைவர்களால் தாபிக்கப்பட்ட மருதானை சாகிரா கல்லூரி இவ்வாறானதே. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் நாவலர் முன் முயற்சியினால் வளர்ச்சி பெற்றதே. இந்து போட் ராஜரத்தினத்தின் நிர்வாக முனைப்பினால் வடமாகாணத்தின் பல பகுதிகளிலும் ஏராளமான சைவப்பிரகாச வித்தியாசாலைகள் வளர்ச்சி பெற்றதும் இதே காலத்தில்தான்.

கொழும்பு வெள்ளவத்தைப் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற கல்கத்தா நகரைத் தலைமையிடமாகக்கொண்டு தொழிற்படும் இராமகிருஷ்ண மிஷன், சாதிமதபேதமற்ற சமரச சன்மார்க்க உணர்வோடு பல பாடசாலைகளை நிர்வகித்தது. யாழ்ப்பாண நகரில் ஆறுமுக நாவலர் உயர்சாதிப் பிள்ளைகளுக்கு மாத்திரம் கல்வி வழங்கும் பாடசாலைகளை நிறுவியிருந்தார். சமூகரீதியில் தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகள் கற்பதற்கு தனது கதவு களைத் திறந்துவிடும் நோக்கில் நாவலர் வாழ்ந்த அதே வண்ணார் பண்ணைப் பிரதேசத்தில் 1917இல் இராமகிருஷ்ண மிஷன் வைத்தீஸ்வர வித்தியாலயம் தாபிக்கப்பட்டது.

ஸ்ரீவைத்தீஸ்வராக் கல்லூரி என (தற்போதும்) இயங்கி வருகிறது. 1917-1961வரை இராமகிருஷ்ண வைத்தீஸ்வர வித்தியாலயம் (RKM Vaideeshwara) என்ற பெயரிலேயே இது செயற்பட்டது.

கொழும்பு மாநகரில் ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளின் வழியாகக் கல்வி கற்பிக்கும் ஏராளமான பௌத்த, கிறிஸ்தவ, இந்து, இஸ்லாமிய சமய பண்பாட்டில் கல்வி கற்பிக்கும் பாடசாலைகள் இயங்கி வருவதும், அவை பெரும்பாலும் அரச பாடசாலைகளாகவும், அரச உதவி பெறும் பாடசாலைகளாகவும் இயங்கி வருவதும் சிறப்பான வளர்ச்சி ஆகும்.

(தொடரும்)

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

Vlambaram - November 01 2024 New _Vlambaram-Front 2024-10-31 7:03 PM Page 8



## நாமும் நமது இல்லமும் 665

# கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் மீண்டும் இறக்கம்!



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடியர்கள் எதிர்பார்த்தது போலவே 2024 ஒக்ரோபர் 23அன்று இந்த வருடத்தின் (2024) நான்காவது தடவையாக (4) மீண்டும் கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை, இதன் ஆளுநர் திரு. ரிவ் மக்கெலம் (Tiff Macklem) குறைத்துள்ளார்.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வங்கியின் வட்டி வீதம் 5%ஆகக் காணப்பட்டது. இந்த தடவையில் ஏற்பட்ட 0.50% வட்டி வீதக் குறைப்பினால் மத்திய வங்கியின் புதிய வட்டி வீதம் 3.75%ஆகக் காணப்படுகின்றது. இதனால் முதல்தர வங்கியின் முதன்மை வட்டிவீதம் 5.95% ஆகக் குறைந்துள்ளது. (TDயின் முதன்மை வட்டி வீதம் 6.10%ஆகக் காணப்படுகின்றது)

கனடிய மத்திய வங்கியின் ஆளுநரின் எதிர்பார்ப்புபோல, பணவீக்கம் 2%இற்குக் கீழாகக் (1.6%) குறைந்துள்ளது.

அத்துடன் கனடியர்களின் பொருளாதார நிலைமையும் பெரும் நெருக்கடிக்குள் செல்வதனாலும், ஆதனம் வாங்குவோரின் எண்ணிக்கையும் குறைந்து வருவதாலும் வட்டிவீத இறக்கம் என்பது தவிர்க்க முடியாததே.

இந்நிலைமை, அதாவது வட்டி வீதம் தொடர்ந்து குறையும் என்பதே அநேகமாக பொருளாதார வல்லுநர்கள் எதிர்பார்ப்பு. கனடிய மத்திய வங்கியின் அடுத்த சந்திப்பிலும் (டிசெம்பர் 11, 2024) மேலதிக வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம். பொதுவாக குளிர் காலத்தில் (ஒக்ரோபர் - மார்ச்) ஆதன வியாபாரம் மந்த நிலையை அடையும். இதனையும் தவிர்ப்பதற்கு மேலதிக வட்டி இறக்கம் நிச்சயம் தேவைப்படும்.

இன்றைய காலத்தில், வித்தியாசமான நிலைமைகளை அவதானிக்கக்கூடியதாக உள்ளதாக, அடமானக் கடன் பெற்றுக் கொடுக்கும் நிதி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. அதாவது 42%ஆன, ஆதனம் வாங்குவோர் தனி ஒருவராகவே ஆதனத்தை வாங்க விரும்புவதாகத் தெரிவிக்கின்றனர். முந்தைய காலத்தில் பொதுவாக இருவர் சேர்ந்து ஆதனம் வாங்குவது இயல்பாகவே காணப்பட்டது.

0.50% வட்டிவீதம் இறக்கம், இதற்கு முன்பாக மார்ச் 2020இல் காணப்பட்டது. ஏறக்குறைய 4 வருடங்களிற்குப் பிற்பாடே இந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டுள்ளது. மார்ச் 2022இலிருந்து அதிகரித்த வட்டி வீதம் ஜூன் 2024இலிருந்து இறங்கத் தொடங்கியது. இந்த ஒழுங்குமுறையை அவதானிக்கவும்.



முக்கியமாக, ஆளுநர் இன்னுமொரு விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, பொருளாதார ரீதியில் நடுநிலையான கனடிய வட்டிவீதம் 2.25%இலிருந்து 3.25% ஆகும். இதிலிருந்து தெரிய வருவது, மேலதிக வட்டிவீத இறக்கத்தை எதிர்காலத்தில் நிச்சயம் எதிர்பார்க்கலாம். கனடிய பணவீக்கம் கட்டுப்பாட்டில் இருந்தால் எதிர்காலத்தில் (குறிப்பாக 11 டிசெம்பர், 2024) மேலதிக வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம்.

இன்றைய வட்டிவீத இறக்கத்துடன் ஆதன வியாபாரத்தில் முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.

இப்பொழுது கனடியர்களின் எண்ணம், மாறுகின்ற வட்டிவீதத்தில் அடமானக் கடனை வைத்திருப்பதா அல்லது மாறாத (Fixed Mortgage) 3 வருட அல்லது 5 வருட வட்டிக்கடனில் வைத்திருப்பதா என்பதாகும்.

எனினும் 5 வருட வட்டி வீதம் 4%இற்கு குறைவாகக் காணப்படுகின்றது. ஆனால், மாறுகின்ற வட்டிவீதம் 5%இற்கு மேலாகவே காணப்படுகின்றது.

இதனால் 5 வருட மாறாத வட்டி வீதத்தையே (Closed Mortgage or Fixed Mortgage) அதிக மக்கள் விரும்புவதாகத் தெரியவருகின்றது. எனினும், மார்ச் 2025 மட்டில் மேலதிக வட்டிவீத இறக்கத்தை எதிர்பார்க்கலாம். இதனால் மாறுகின்ற வட்டி வீதத்தை இப்பொழுது பெற்று, மார்ச் 2029 மட்டில் 3 அல்லது 5 வருடத்திற்கு மாறாத வட்டி வீதத்திற்கு மாற்றுவதும் சிறப்பாக அமையலாம். எனினும், எவ்வாறாக முடிவுகளை எடுப்பது என்பது குறிப்பிட்ட ஆதன உரிமையாளரின் பொருளாதார நிலைமையிலே தங்கியுள்ளது.

குறிப்பாக முதல் தடவையாக ஆதனம் வாங்குவோர் 3 அல்லது 5 வருட மாறாத வட்டி வீதம் சிறப்பாகலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஏற்கனவே அடமானக் கடனை வைத்திருப்போர், மீண்டும் அடமானக் கடனைப் புதுப்பிப்போர் (Renewal) மாறுகின்ற வட்டி வீதத்தைப் பற்றியும் சிந்திக்கலாம். எனினும், முடிவுகள் அவர்களைப் பொறுத்ததே.

தகுந்த, அனுபவமிக்க அடமானக்கடன் பெற்றுத் தருபவரின் ஆலோசனை பெறுவது சிறப்பாகலாம்.

---

## Words of Peace

பிரேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
www.timelesstoday.com
www.premrawat.com

கடந்த 40 வருடங்களாக உள்ளத்தின் அமைதியைப்பற்றிப் பல நாடுகளிலும் நான் நிகழ்ச்சிகள் நடத்தி வருகையில் வெவ்வேறு புத்தகங்களைப் படித்திருக்கிறேன். இது ஒரு வித்தியாசமான புத்தகமாக இருப்பதால் உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

இதில் பிரேம் ராவத் பிறப்பிலிருந்து தன்னுடைய வாழ்க்கையை விவரிக்கும் போது ஒரு புதிய கண்ணோட்டத்தோடு அவரோடு பயணிக்க நமக்கு ஓர் அழைப்பை விடுக்கிறார். நாம் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு செல்லும் போது பல வித்தியாசமான கருத்துகளையும், எண்ணங்களையும் உணர்கிறோம். இது ஓர் அலாதியான அனுபவமாக இருக்கிறது. இந்தப் பயணத்தில் மிகவும் அருமையான கவிதைகளையும், பெரியோர் எழுதிய பொன்மொழிகளையும் சுவைத்துக் கொண்டு செல்கிறோம். பிறகு பல கதைகளையும் நாம் கேட்கிறோம். மிகவும் புல்லரிப்பான அனுபவமாக இருக்கிறது.
நாம் ஒவ்வொரு அத்தியாயமாகப் பார்த்துக்கொண்டு வரும்போது அவர் வட இந்தியாவில் செண்பக மரத்தடியிலே தன்னுடைய மிகவும் அற்புதமான ஓர் அனுபவத்தைப் பற்றி விவரிக்கையில் நாம் அதிலே இணைந்துவிட முடியுமா என்று ஆவலோடு இருக்கிறோம். பிறகு அவர் பல நாடுகளுக்கும் நம்மை அழைத்துச் செல்கிறார்.

தென் அமெரிக்காவில் பல நிகழ்ச்சிகளுக்கு நடுவே மனைவி திடீரென்று தீவிரமாக நோய்வாய்ப்பட்டிருக்கும் செய்தி அவருக்கு வந்தது. அந்த மிகவும் இக்கட்டான நிலையிலே நாம் எல்லோரும் தத்தளித்திருப்போம். அவர் எப்படி நிலவரத்தைச் சமாளித்து, குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு அதேநேரத்திலே நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருந்தார் என்பதையும் நாம் பார்க்கையில் உள்ளம் நெகிழ்கிறோம். நமக்கோர் படிப்பினை. இந்தப் புத்தகத்திலிருந்து இவ்வாறு பல விடயங்களை நாம் கற்றுக்கொண்டே போகிறோம்.

அவர் நம் உலகத்தின் நிலையை விளக்கும்போது அணையாமல் இயங்கும் சாதனங்கள், காணாமல்போன மகிழ்ச்சி, திருடர்களின் கும்பல் என்றெல்லாம் சொல்லும்போது அதிர்ச்சி அடைகிறோம். பின்னர் அவர் மெல்லென நம் வாழ்க்கையின் மையத்தில் இருக்கும் லயத்துக்கு எடுத்துச் செல்லும்போது ஒரு புத்துணர்வு பிறக்கிறது.

'தூங்காமல் தூங்குவது எப்படி?', 'காலமற்ற இன்றைய பொழுது', 'எல்லையற்றதை ஒரு மணிப்பொழுதினுள் காண்' என்றெல்லாம் பாதையிலே எழுதப்பட்டிருக்கும் பலகைகளைக் கண்டு திகைக்கிறோம்.

இறுதியில் இந்தப் பயணம் முடிவுறும்போது, நம் இதயத்தை நாம் அரவணைத்து, அதனோடு இணைந்து முழுகும் புத்துணர்வோடு பிரியாவிடை பெறுகிறோம்.







பலகாரத் தேவைகளுக்கு

ரவை லட்டு, கேசரி, தொதல், அரியதரம், பயத்தம் பலகாரம் போன்ற பலகார வகைத் தேவைகளுக்கு
அழையுங்கள்: 647.765.2250

# தமிழர்களை அதிக குழந்தைகள் பெற்றுக்கொள்ள வலியுறுத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் – ஏன்?

**கண்ணன்**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், சமீபத்தில் ஒரு திருமண விழாவில் கலந்துகொண்டு, மணமக்களை வாழ்த்திப் பேசும்போது, “இப்போது யாரும் 16 செல்வங்களைப் பெற்று வாழுங்கள் என்று வாழ்த்துவது கிடையாது. அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்றுதான் சொல்கிறோம். ஆனால், இன்று ஏன் அளவோடு பெற வேண்டும், நாமும் 16 குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளலாமே என்று சொல்லும் நிலை வந்திருக்கிறது” என்று பேசியுள்ளார்.

தமிழ்நாட்டின் பக்கத்து மாநிலமான ஆந்திர மாநில முதலமைச்சர் சந்திர பாபுவும், இதேபோன்ற ஒரு கருத்தை சமீபத்தில் தெரிவித்திருக்கிறார். “ஆந்திர மக்கள் கூடுதல் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப் பெற்றுக்கொள்வோருக்கு சலுகைகள் அளிக்கப்படும். இரண்டு குழந்தைகளுக்கு மேல் உள்ளோர் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிட முடியாது என முன்பிருந்த சட்டத்தை நீக்கியிருக்கிறோம். இரண்டு குழந்தைகளுக்குமேல் உள்ளோர் மட்டுமே இனி உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற புதிய சட்டத்தைக் கொண்டுவருவோம். அதிக குழந்தைகளைப் பெறுவது உங்களுக்காக நீங்கள் செய்யவில்லை, தேசத்தின் நலனுக்காகச் செய்கிறீர்கள்” என்று குறிப்பிட்டார்.

தென்னிந்தியாவின் இரு மாநில முதலமைச்சர்களின் இந்தப் பேச்சு இப்போது பேசுபொருளாகி இருக்கிறது. இவர்களின் பேச்சில் வெளிப்படும் மக்கள் தொகைப் பெருக்கம் குறித்த கவலைக்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று, இந்திய ஒன்றிய அரசின் வரிப் பகிர்வுக் கொள்கை. மாநிலங்களுக்கு இடையில் வரி வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுவதற்கு முக்கிய காரணியாக, அந்தந்த மாநிலங்களின் மக்கள் தொகையும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இரண்டாவதாக, விரைவில் நாடாளுமன்றத் தொகுதிகள் மக்கள் தொகைக்கு ஏற்ப மறுசீரமைப்புச் செய்யப்பட இருப்பது.



இந்தியாவின் புதிய நாடாளுமன்ற கட்டிடத் திறப்பு விழாவின்போது, கடந்த மே 28, 2023அன்று பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “நாடாளுமன்றத்தின் மொத்த இடங்கள் மற்றும் எம்.பி.க்களின் எண்ணிக்கை வருங்காலத்தில் அதிகரிப்பதைக் காணவிருக்கிறோம். அதனடிப்படையில் புதிய நாடாளுமன்றத்தை நிர்மாணிப்பது காலத்தின் தேவையாக இருந்தது. புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தின் மக்களவையில் 888 பேர், மாநிலங்களவையில் 384 பேர் அமரலாம்” என்று குறிப்பிட்டார்.
இதன்பின்னர் கடந்த 2023 செப்ரெம்பர் மாதம் இது குறித்து கருத்துத் தெரிவித்த இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, “2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததும் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். அதனைத் தொடர்ந்து மக்களவைத் தொகுதி மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்,” என்று கூறினார்.

இதன் அடிப்படையில், விரைவில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படலாம் என்று தகவல்கள் வெளியாகி வருகின்றன. அது நடக்கும் போது தாங்கள் பாதிக்கப்படுவோம் என்ற அச்சம் ஆந்திரா, தமிழ் நாட்டுக்கு மட்டுமல்லாமல் கேரளம், கர்நாடகம் உள்பட அனைத்து தென் இந்திய மாநிலங்களுக்கும் உள்ளது.

## ஏன்?

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, ஒவ்வொரு பத்தாண்டுக்குப் பிறகும் நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை மறுசீரமைப்புச் செய்ய முடிவு செய்யப்பட்டது. தொகுதி எல்லை நிர்ணயச் சட்டத்தின்படி இந்தத் தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்படுகிறது.

மக்கள் தொகையின் அடிப்படையிலேயே தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்படும். இந்திய அரசியல் சட்டத்தின் பிரிவு 81இன்படி, ஒரு மக்களவைத் தொகுதி என்பது 650,000 முதல் 850,000 வாக்காளர்களைக் கொண்டிருக்க வேண்டும். இதன்படி, 1951ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 1952ஆம் ஆண்டு முதன் முதலில் மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 494ஆக இருந்தது.

இதனையடுத்து 1963ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பு நடைபெற்றது. அப்போது மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 522ஆக அதிகரித்தது. தொடர்ந்து, 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை அடிப்படையில் 1973ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தொகுதி மறுசீரமைப்பின்போது தொகுதிகளின் எண்ணிக்கை 542ஆக உயர்ந்தது. இதன்பின்னர் சிக்கிம் மாநிலத்தில் ஒரே ஒரு மக்களவைத் தொகுதி மட்டும் இணைக்கப்பட்டு இந்த எண்ணிக்கை 543ஆக அதிகரிக்கப்பட்டது.

1973இற்குப் பின்னர் 1983ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், நடைபெறவில்லை. அதற்கு முன்னரே 1976ஆம் ஆண்டு, சட்டத்திருத்தம் செய்து, மக்களவைத் தொகுதிகள் மறுசீரமைப்புப் பணிகள் 25 ஆண்டுகளுக்கு, அதாவது 2001ஆம் ஆண்டுவரை ஒத்திவைக்கப்பட்டது. காரணம், இந்தியாவின் மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுக்குள் கொண்டுவர செயல்படுத்தப்பட்ட, ஒன்றிய அரசின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்துவதில் மாநிலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வு நிலவியது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தென்னிந்திய மாநிலங்கள் சிறப்பாகச் செயல்படுத்தின. ஆனால், வட இந்தியாவில் சில மாநிலங்களைத் தவிர்த்து, மற்றவை இத்திட்டத்தில் முனைப்புக் காட்டவில்லை. எனவே, மக்கள்தொகை வளர்ச்சி வீதம் தென்னிந்திய மாநிலங்களில் குறைந்தது. வட இந்தியாவில் அதிகரித்தது.

எனவே, மக்கள் தொகை அடிப்படையில் மீண்டும் தொகுதி மறுசீரமைப்பை அமல்படுத்தினால் தென்னிந்திய மாநிலங்களுக்குத் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும், வடமாநிலங்களில் தொகுதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதாவது, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய தென்னிந்திய மாநிலங்களுக்குத் தண்டனை. அதைச் செயல்படுத்தாத வட இந்திய மாநிலங்களுக்குப் பரிசு என்ற முரணானநிலை உருவானது. எனவே, தமிழ்நாடு உள்பட தென்னிந்திய மாநிலங்கள் இதை எதிர்த்தன.

எனவே, ஒவ்வொரு பத்தாண்டுக்கும் ஒருமுறை மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பை மேற்கொள்வதை நிறுத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டது. 1976இல் இந்தியாவில் நெருக்கடிநிலை அமலில் இருந்த காலகட்டத்தில், அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, மக்களவை எண்ணிக்கை மறுசீரமைப்பை 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தார். இதற்காக அந்தத் தருணத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 81இல் 42ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 1973ஆம் ஆண்டு மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையில் மாற்றம் செய்யாமல் அடுத்த 25 ஆண்டுகளுக்குத் தொடருவது என்று முடிவு செய்யப்பட்டது. அதற்குள் சீரான மக்கள் தொகை வளர்ச்சி வீதம் சாத்தியமாகும் என்று நம்பப்பட்டது. ஆனால், அப்படி நடக்கவில்லை.

இதனால், 2001இல் பிரதமராக இருந்த வாஜ்பாயுக்கும் இந்திரா காந்தியைப் பின்பற்றவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனாலும், 2001ஆம் ஆண்டு மீண்டும் மக்களவைத் தொகுதிகள் எண்ணிக்கையை மறுவரையறை செய்வதற்கான பணிகளை மேற்கொள்ள அன்றைய பாஜக ஒன்றிய அரசு திட்டமிட்டது. ஆனால், அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த திமுக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன்தான் வாஜ்பாய் அரசு நீடித்தது. இதனிடையே, தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பதவிவகித்த திமுக தலைவர் கருணாநிதி, பெப்ரவரி 22, 1999அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் இது தொடர்பாக நடந்த விவாதத்தில் பேசும்போது, “தமிழகத்துக்கு 1971ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒதுக்கப்பட்ட 39 மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாமல் எல்லைகளை மட்டும் மறுவரையறை செய்ய வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சருக்கு ஜூன் 02, 1998ஆம் ஆண்டு கடிதம் எழுதப்பட்டது.” என்று சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி 19ஆம் பக்கம்



# நானிலம் போற்றும் நட்பு - 55



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது திரிகடுகம் நூலின் ஐம்பத்தைந்தாம் செய்யுளைக் கவனிப்போம்.

“அரு மறை காவாத நட்பும், பெருமையை
வேண்டாது விட்டு ஒழிந்த பெண்பாலும், யாண்டானும்
செற்றம் கொண்டாடும் சிறு தொழும்பும், இம் மூவர்
ஒற்றாள் எனப்படுவார்.”

‘செற்றம்’ என்றால் ‘கோபம்’ என்றும் ‘ஒற்றாள்’ என்றால் வேவுக்காரர்” என்றும்பொருள் கொள்ளுமாறு உரையாசிரியர்கள் விளக்கம் தந்துள்ளனர்.

இந்தச் செய்யுளிற்கான பொருள் “மறைமொழியை வெளிப்படுத்தும் நட்பும், பெருமைக் குணத்தை விரும்பாத தர்மத்தின் நீங்கிய பெண்ணும் எப்பொழுதும் தன் மேலான் செயல்களை உட்பகைக் கண்ணோட்டத்துடன் நோக்கும் சிற்றூழியனும் ஒற்றர்கள் என்று சொல்லப்படுவர்.” என்று உரையாசிரியர்கள் விளக்கம் கொடுத்துள்ளனர்.

இந்தச் செய்யுளில் புலவர் முதலில் இரகசியங்களை வெளியிடும் நண்பர்கள் வேவுக்காரர்கள் என்று கருதப்படுவர் என்ற கருத்தைச் சொல்லுகின்றார்.

புலவரால் இந்தச் செய்யுளில் நட்புப் பற்றியும், ஏனைய விடயங்கள் பற்றியும் குறிக்கப்பட்ட அறிவுரைகள் மிகவும் பயனுள்ள அறிவுரைகளாக உள்ளன. புலவரின் நட்புப் பற்றிய கருத்து காரணமாக இந்தத் தொடர் கட்டுரைக்கு வலிமை சேர்க்கும் விதமாக இங்கு இணைத்துள்ளேன்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றி முப்பதாம் பாடலைக் கவனிப்போம்.
இது புலவர் வெள்ளி வீதியார் பாடிய பாட்டு. இவர் பெண் புலவர். தலைவனைப் பிரிந்த தலைவி வருந்துவதைப் பார்த்துத் தோழி கூறியது. இது பாலைத்திணை சார்ந்தது.

தலைவனைப் பிரிந்த தலைவி ஒருத்தி வருந்திக் கொண்டிருக்கிறாள். தலைவன் வருவதாகச் சொல்லிச் சென்ற நாட்கள் எல்லாம் நகர்ந்துவிட்டன. அவன் எப்பொழுது வருவானோ என்ற ஏக்கம் அவளைப் பிடித்து அலைக்கழித்தது. அவள் தனது துன்பத்தை வாய் விட்டுக் கூறமுடியாத வாட்டத்துடன் இருந்தாள்.

தலைவியின் இந்த நிலையைக் கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். தலைவியின் உள்ளத்திலே நம்பிக்கை பிறக்கும்படி உறுதியாகச் சொல்லுகிறாள்.

“நிலம் தொட்டுப்புகாஅர் வானம் ஏறார்
விலங்கு இரு முந்நீர் காலின் செல்லார்
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
குடிமுறை குடிமுறை தேரின்
கெடுநரும் உளரோ நம் காத லோரே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
“தலைவியே! நீ சிறிதும் கவலைப்படாதே. நமது தலைவர் எங்கே இருந்தாலும் சரி! அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து விடுவேன். தூதனுப்பி அவரைக் கொண்டு வந்து உன்முன்னே நிறுத்துகின்றேன்.

அவர் எங்கும்போய் விடவில்லை, இந்த உலகில்தான் இருக்கின்றார். நம் காதலருக்கு நிலத்தைத் துளைத்துக்கொண்டு பூமிக்கு அடியிலே செல்லும் வித்தை தெரியாது. வானத்திலே பறந்து செல்லும் வித்தையும் தெரியாது. கடலின்மேல் காலால் நடந்து செல்லும் வித்தையும் தெரியாது. ஆதலால் அவர் பாதாள உலகுக்கோ, வானுலகுக்கோ வேற்று நாட்டுக்கோ போயிருக்க முடியாது.”

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றி முப்பத்திரண்டாவது பாடலைக் கவனிப்போம்.

இது சிறைக்குடியாந்தையார் என்னும் புலவர் பாடிய பாட்டு. “ஒரு பெண் உனது உள்ளத்தைப் பறிகொடுப்பது உனக்குத் தகுந்ததா” என்று பாங்கன் கேட்டான். அவனுக்குத் தலைவன் தனது உள்ளத்தைப் பறிகொடுத்ததற்கான காரணத்தை எடுத்துரைத்தான். இது குறிஞ்சித் திணை சார்ந்தது.

ஒரு தலைவன் அவன் மிகவும் திறமைசாலி எளிதில் ஏமாந்து விடமாட்டான். தனது நெஞ்சை எக்காலத்திலும் நெகிழ விட்டு விடமாட்டான். ஆய்ந்து பார்த்துத்தான் எதையும் ஒப்புக்கொள்ளுவான். இவன்தான் வேட்டை மேற்குறிவைத்துச் சென்ற ஒரு மலைச்சாரலிலே ஒரு மங்கையைக் கண்டான். அவன் உள்ளம் அவனை மீறி அம்மங்கையினிடம் போய்விட்டது. அவளும் அவனை விரும்பினாள். அவனும் அவளை விரும்பினான். அப்புறம் என்ன தடை? பேச்சுக்கே இடமில்லாமற் போயிற்று. இருவரும் காதலர்களாகி விட்டனர். என்றும் இணைபிரியாக் காதலர்களாக வாழ்வதென்றும் உறுதி செய்து கொண்டனர்.

பின்னர் அவன் தனது பாங்கனிடம் திரும்பிவந்தான். “இவ்வளவு நேரமா வேட்டை? உனது வேட்டையில் ஏதோ புதுமையிருப்பதாக நினைக்கின்றேன். உன்னிடம் காணும் மாறுதல் அந்தப் புதுமையைச் சொல்லுகிறது. வேட்டைக்குப்போன இடத்தில் நிகழ்ந்த அந்த வேடிக்கைதான் என்ன?” என்றான் பாங்கன்.

“தோழனே! நீ நினைப்பது உண்மைதான். எனக்குக் கிடைத்த வேட்டை அருமையானது. என் வாழ்விலே எந்நாளும் இன்பம் சுரக்கக்கூடியது. என் மனத்திற்கிசைந்த ஒரு வாழ்க்கைத் துணைவியைப் பெற்றேன். அது என் செயல் அல்ல. இயற்கை எனக்களித்த உதவி” என்றான் தலைவன்.

“தலைவனே! உன் செய்கை எனக்குத் திகைப்பைத்தான் தருகிறது. நீதானா இப்படிப் பேசுகிறவன்? எங்கோ வேட்டைக்குச் சென்றவிடத்தில், எவளோ ஒருத்தியிடம் உனது உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்டாய். எல்லாம் அறிந்த நீ எளிதில் ஏமாறாத நீ, கலங்காத கருத்துள்ள நீ, இப்படி ஏமாறலாமா?” என்றான் பாங்கன்.

“பாங்கனே! எனது உள்ளத்திலே குடியேறிய அவளைப்பற்றி நீ அறிய மாட்டாய். அவள் சிறப்பையும், இயல்பையும் அறிந்தால் இப்படி என்னைப்பற்றிக் குறைவாக எண்ண மாட்டாய், பேசவும் மாட்டாய், அவள் தன்மையைச் சொல்லுகிறேன் கேள்” என்று கூறத் தொடங்கினான் தலைவன்.

> “
> Share your smile with the world. It's a symbol of friendship and peace.
> —Christie Brinkley

“கவவுக் கடுங்குரையள், காமர் வனப்பினள்,
குவவு மென்முலையள், கொடிக் கூந்தலளே,
யாங்கு மறந்து அமைகோ யானே, ஞாங்கர்க்
கடும் சுரை நல் ஆன் ‘நடுங்குதலைக் குழவி’
தாய்காண் விருப்பின் அன்ன,
சாஅய் நோக்கினளே! மா அ யோளே.”

இப்பொழுது இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

“மிகவும் விரைந்து அன்புடன் தழுவிக் கொள்ளுகிறவள். காணக் காண உள்ளத்திலே இன்பமூட்டும் அழகையுடையவள். குவிந்த மெல்லிய மார்பையுடையவள். கொடிபோல் நீண்டு கறுத்து அடர்ந்த கூந்தலையுடையவள். இப்படிக் காட்சியளிக்கும் அவளை யான் எப்படி மறந்து வாழ முடியும்? அவள் இளம் பசுங்கன்றைப் போன்றவள். பக்கத்திலே மேயச் சென்ற தாய்ப் பசுவையே எண்ணி, அது எப்பொழுது திரும்பி வருமோ என்று கவலைகொண்டு, அதன் வருகைக்காக ஏங்கியிருப்பது இளங்கன்றின் தன்மை. அதைப்போல அவளும் என்னை எதிர்பார்க்கும், தன் விருப்பத்தை வெளியிடும், பரிதாபமான பார்வையை உடையவள். மாநிறங் கொண்டவள். இவளை நான் எப்படி மறக்க முடியும்? நீயே சொல்!” இவ்வாறு கூறினான் தலைவன்.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றி முப்பத்திமூன்றாவது பாடலைக் கவனிப்போம்.

இது உறையூர் முது கண்ணன் சாத்தன் என்பவர் பாடிய பாட்டு. காதலன் தன்னை மணந்துகொள்ளாமல் காலங்கடத்துவதைக் கண்ட தலைவி மனம் வருந்திக் கூறியது. இது குறிஞ்சித் திணை சார்ந்தது.

ஒரு தலைவி, அவளைக் காதலித்துக் கைப்பிடித்த தலைவன் இன்னும் அவளை வெளிப்படையாக மணந்து கொள்ளவில்லை. மணந்து கொள்வதாக அவன் கூறிய தவணைகள் எல்லாம் கடந்து விட்டன. இதைத் தனது நெஞ்சிலே நினைந்த தலைவி, தனது துன்பத்தைத் தோழியிடம் கூறுகின்றாள்.

“புனவன் துடவைப் பொன்போல் சிறுதினை,
கிளிகுறைத் துண்ட கூழை இருவி
பெரும் பெயல் உண்மையின், இலைஒலித்தாங்கு, என்
உரம் செத்தும் உளெனே தோழி! என்
நலம் புதிது உண்ட புலம்பினானே.”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.
‘தோழியே என்னுடைய பெண் தன்மையைப் பறி கொடுத்து விட்டேன். எனது காதலன் அதை உண்டு விட்டான். எனது நலனையிழந்து நான் தனித்து வருந்துகின்றேன். எனது வலிமையும் அழிந்துவிட்டது. ஆயினும் நான் இன்னும் உயிரோடு உலவிக் கொண்டிருக்கின்றேன். இதற்கு ஒரே காரணம்தான் உண்டு.

இந்த மூன்று பாடல்களிலும் நட்பின் பெருமை நன்கு புலப்படுகிறது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

Vlambaram - November 01 2024 New _Vlambaram-Front 2024-10-31 7:03 PM Page 11



# போர் அறமும் இஸ்ரேலிய – பாலஸ்தீனப் போரும்



T. சிவபாலு

பாலஸ்தீனத்தில் நடக்கும் பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட போரில் நாளாந்தம் கொல்லப்படும் மனித அவலங்களைத் தட்டிக் கேட்க முடியாமல் ஐ.நா. அமைப்பின் வாயை மூடியுள்ளது அமெரிக்காவின் வீட்டோ. மக்களை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அமெரிக்காவைத் தவிர அனைத்து நாடுகளும் வரவேற்றன. ஆனால் அதனைத் தடுத்து பாலஸ்தீன மக்கள்மீது கொடுமைமிக்க போரைக் கட்டவிழ்த்துவிட இஸ்ரேலிய நாட்டிற்கு உதவிக்கரம் நீட்டியது அமெரிக்கா. பயங்கரவாதத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இஸ்ரேலிற்கு தமது ஆதரவுக்கரத்தை நீட்டுவதாக அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் லோயிட் ஒஸ்ரின் (Lloyd Austin) குறிப்பிட்டுள்ளமை உலக நாடுகளை ஆச்சரியப்படுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தினால் ஐ.நாவில் கொண்டுவரப்பட்ட போர் நிறுத்தத் தீர்மானத்தை தனது வீட்டோ அதிகாரத்தால் தடுத்து நிறுத்தப்பட்டது உலகில் நிலவும் மிகக் கொடூரமான போராகக் காணப்படுகிறது.

அமெரிக்காவின் நட்பு நாடாக இதுவரை தலையாட்டிக் கொண்டிருந்த சவூதியரேபியாவே எதிர்த்தும்கூட பாலஸ்தீனர்களை அழிப்பதற்கு போர் அறத்தைக் கிடப்பில் போட்டுவிட்டு கொடுங்கோலை உயர்த்தியுள்ளமை சங்க இலக்கியமாக புறநானூறு காட்டும் செய்யுளை நினைவுறுத்துகின்றது.



அரசன் போர் செய்யத் தொடங்கும்முன் அந்நாட்டில் வாழும் பசுக்கள், பெண்கள், நோயுற்றோர், அந்தணர் ஆகிய அனைவரும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள் என்றும் தான் விடக்கூடிய அம்புகள் அவர்கள்மீது பட்டு இறந்துவிட வேண்டாம் என்றும் அறிவிப்புச் செய்கின்றான். இதன்மூலம் உயிரைக் காத்தல் அரசனின் கடமையாகக் கருதுகின்றனர் என்பதனைக் காட்டுகின்றது. இதனையே

“ஆவும்வும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன்
இறுக்கும்
பொன்போல் புதல்வர் பெறாஅ தீரும்”
எம் அம்பு கடிவிடுதும்நும் அரண் சேர்மின்
என அறத்தாறுநுவலும் பட்கை, மறத்தின்
(புறம் பா.எ.9)

இதன்படி

1). மனித உரிமை பாதுகாக்கப்படல் வேண்டும்.
2). பல்வேறு நிலைகளில் உள்ள வேறுபாடுகளைக் களைய வேண்டும்.
3). மனித நேயமற்ற நடத்தை மற்றும் தோல்விகண்டோரை மாண்பற்ற முறையில் வதைத்தல் அல்லது தண்டித்தல் கூடாது.
4). உணவு, உடல்நலம், தங்குமிடம் போன்ற அமைப்பில் நீதி நெறியான பாதுகாப்பு முக்கியமானது.
5). பெண்களையும், குழந்தைகளையும் வன்மையாக நடத்தக்கூடாது

என்பன போர் அறத்தின் பாற்படும் என்பதைப் புறநானூற்றுச் செய்யுளால் அறியமுடிகின்றது. இதனை இன்றைய உலகில் இடம்பெறும் போர்களில் காணமுடியுமா என்பது கேள்விக்குறியே! மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளை அப்படியே விட்டுவிட்டு வைத்தியர்கள் ஓடும் நிலைமையைக் கண்டும் அதனைப் பொருட்படுத்தாத நாடும் ஒரு நாடா என்னும் கேள்வி பாலஸ்தீன மருத்துவமனையில் கைவிடப்பட்ட குழந்தைகளின் அழுகிய சடலங்களை எடுத்துக்காட்டுகின்றன. இந்த அவலங்களைப் பார்த்தும் மனமிரங்காத நாடாக அமெரிக்கா நடந்து கொள்வது மனங்கொள்ளத்தக்கதல்ல.



பிடித்துச் சென்ற அப்பாவிப் பொதுமக்களை உடைகளைக் களைந்து அவர்களின் படங்களைப் பிடித்து உலக அரங்கில் காட்டித் தங்கள் வீரப் பிரதாபங்களை இஸ்ரேலிய இராணுவம் காட்டிவருவதைக் காணும்போது போர் அறம் பின்பற்றப்படுகின்றதா? என்பதே மனவேதனையைத் தரும் விடயமாக உள்ளது.

# வேட்டையன் – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

இந்த வருடம் விஜயதசமிக்கு ரஜினிகாந்தின் நடிப்பில் வெளியான படம் வேட்டையன். இப்படத்தில் ரஜினிகாந்த் அதியன் என்ற காவலதிகாரியாக நடித்துள்ளார்.

வழமைபோல, அதியன் கொடூர குற்றவாளிகளைத் தண்டிக்கும் விதமாக அவர்களை என்கவுண்டர் (Encounter)மூலம் கொலை செய்யும் கதாநாயகன் ஆவார். இச்செயல்கள் பற்றிய விசாரணை வரும்போது அதியனின் சார்பில் தீர்ப்பு வரும்.

இவ்வாறு வேறு ஒரு காவலதிகாரியின் விசாரணைமூலம் அடையாளம் காட்டப்பட்ட கொலையாளியை மக்களின் ஆதரவுடன் அதியன் சுட்டுக்கொன்று விடுகிறார்.

ஆனால், வழமைக்கு மாறாக, மனித உரிமை விசாரணை செய்பவர் (அமிதாப் பச்சன்) அதியன் நீதி என்று எண்ணிச் செய்த செயல், அநீதியாக இருக்கலாம் எனச் சுட்டிக்காட்டுகிறார். அதாவது, குற்றவாளியைத் தண்டிக்காமல் ஒரு நிரபராதியை அதியன் கொன்று இருக்கலாம் என்கிறார்.

அவர் கூறியது உண்மை என்று அதியன் கண்டுபிடிப்பாரா? அது உண்மை என்றால் நீதியைத் தேட விரும்பும் அவர் என்ன செய்வார்? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

படங்களில் கதாநாயகன் தீவிர குற்றவாளிகளை வேறு வழியில்லாமல் சுட்டுக் கொன்று மக்களுக்காக நீதியும்,



கதைக்கு முடிவும் கொண்டு வருவது பார்ப்பதற்கு நன்றாக இருந்தாலும், உண்மையில் இவ்வாறான செயல்களுக்கு சட்டம் மற்றும் மனிதஉரிமை சார்ந்த கேள்விகள் உள்ளன என பார்வையாளர்களுக்குத் தெரியும். படங்களிலேயே காவல்துறையைச் சார்ந்த கதாநாயகர்களுடன் காவல்துறையைச் சார்ந்த வில்லன்களையும் கண்டுள்ளோம். வழமையாக நீதியைப் பின்பற்றுவோர் கதாநாயகர்கள். அநீதி செய்வோர் வில்லன்கள். இப்படத்தில் அதியன் சந்தேகமின்றி நீதியைப் பின்பற்றும், மனசாட்சியுடைய கதாநாயகன் என்றாலும், இயக்குநர் அவர் அநீதி செய்திருக்கலாம் எனக் கதையை உண்மைத்தன்மையுடன் அமைக்கிறார்.

வழமைபோல அதியன் அதை எதிர்த்தாலும், நீதிபதி (அமிதாப் பச்சன்) அவருக்கு சமமாகக் கதையில் செயல்படுவதால் பார்வையாளர்களுக்கு இருபக்க நியாயமும் உணர்த்தப்படுகிறது. இருவரின் நடிப்பும் சிறப்பாக அமைந்துள்ளபடியால் கதை ஏற்கக்கூடியதாக உள்ளது. அத்தோடு, நீண்ட விளக்க உரைகளைத் தவிர்த்து, இயற்கையான உரையாடல்களும் காட்சி



களும் கதைப்போக்கும் பாவிப்பதால் படத்தின் கருத்து நன்றாக படத்தில் இறுதிக்காட்சிவரை விளக்கப்படுகிறது.

அதியனுக்கு வேலையில் துணையாக ரூபா (ரித்திகா சிங்) மற்றும் பாட்ரிக் (ஃபகத் பாசில்) உள்ளனர். காவல் அதிகாரியான ரூபா ஒரு நல்ல கதாபாத்திரம் என்றாலும், நீதிபதியிடம் படித்துப் பின்பு அதியனுடன் வேலை செய்கிறபடியால், அவருக்குக் கூட முக்கியத்துவம் அளித்திருக்கலாம். அத்தோடு ரித்திகா ஒரு விளையாட்டு வீரர் என்பதால் அவருக்கு நீண்ட சண்டைக்காட்சியை அளித்திருக்கலாம். தமிழில் வில்லனாகவும், கதாநாயகனாகவும் காணப்பட்ட ஃபகத் பாசில் இந்தப் படத்தில் உணர்வு கலந்த நகைச்சுவைக் கதாபாத்திரத்தில் நன்றாக நடித்துள்ளார். இவர்களோடு அதியனின் மனைவி தாரா (மஞ்சு வாரியர்) சிறு கதாபாத்திரமாக இருந்தாலும், வழமைக்கு மாறாக, கணவனால் பாதுகாக்கத் தேவையற்ற மனைவியாக கதையில் வருவது மிகவும் சிறப்பாக இருந்தது.

படம் மூன்று மணிநேரம் என்றாலும் கதை எதிர்பார்த்தபடியாக இருந்தாலும், படத்தில் தெளிவான உரை, காட்சி மற்றும் கதை அமைப்பு இருப்பதாலும், கதாபாத்திரங்களில் சிலர், சில எதிர்பாராத, சுவாரஸ்ய



மான குணங்கள் கொண்டதாலும் படம் விறுவிறுப்பாகச் செல்கிறது.

ஏழைகள் எல்லோரும் குற்றவாளிகள், பணமுள்ளவர்கள் எல்லோரும் நல்லவர்கள் போன்ற தவறான கருதுகோளை (Sterotypes) இப்படம் எதிர்க்கிறது. இவ்வாறான கருதுகோளை அடிப்படையாகக்கொண்டு செயல்படக்கூடாது என்ற இப்படத்தின் கருத்து, எங்கேயும், எப்போதும் பொருந்தும் விடயம். அத்துடன் இயக்குனர் ஞானவேலின் ஊடகவியலாளர் அனுபவமும் இக்கதையில் வெளிப்படுகிறது. எனவே பொழுது போக்கு, அதிரடித் திரைப்படங்களைப் பார்க்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.

34 ஆவது ஆண்டில்

Tel: 416-282-8059

# விளம்பரம்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

email: vlambaram@sympatico.ca www.vlambaram.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Family preferred. Close to school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.878.3342**

**MORNINGSIDE & OLDFINCH**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.568.5078**

**WHITES RD & TAUNTON**
3 Bedrooms bsmt for rent. 2 Washroom, Sep. entrance, parking & laundry. Avail. Nov. 15, 2024.
**647.642.8068/ 647.467.7660**
**416.509.5484**

**HOOVER PARK DR. & 10TH LINE STOUFFVILLE**
1 Bedroom & 1 washrooms bsmt Apt. for rent. Sep. entrance,parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**MARKHAM & 14TH AVENUE.**
1 Bedroom bsmt for rent. Parking & Sep. entrance. Close to HWY 407 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.902.8191**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.
**416.613.1792 / 437.260.6478**

**BROCK & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & laundry. Walking distance to bus stop, Go station, HWY 401 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.894.8629**

**DONALD COUSENS & HWY 7**
1 Big bedroom bsmt for rent. Sep. entrance. Couple /small family preferred. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.559.2565**

**MEADOWVALE & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. 2 parking. Close to TTC, School, college, U of T & HWY 401. Avail. December 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.494.0854**

**MARKHAM & MCLEVIN**
2 Bedrooms walkout bsmt for rent. 1 parking. 1 Min to bus stop. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.899.6300**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, No parking & laundry. Close to all facilities. Single preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**ELLESMERE & MORRISH**
3 Bedrooms & 3 washrooms brand new bsmt for rent. Sep. entrance & laundry. Close to U of T & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.949.6204**

**MCCOWAN & KINGSTON**
2 Bedrooms bsmt for rent. 2 Sep. entrance & 1 parking. Close to Eglinton Go station, TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.786.3436**

**MEADOWVALE & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to HWY 401. 24 hrs. bus service. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.939.4381**

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & no parking. 2 Min to bus stop (24X7) Avail. immediately.
**416.335.1003 / 647.898.1819**

**KENNEDY & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to Milliken high school & community center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **905.205.0520**

**MARKHAM & LAWRENCE**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance, 2 parking & laundry. Small family/Single preferred. Avail. immediately.
**416.930.5307/ 416.829.0875**

**SHEPPARD & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, washroom, sep. laundry & parking. 5 min walk to TTC. Avail. December 01, 2024
தொடர்புகளுக்கு: **647.390.8269**

## BASEMENT FOR RENT

**TAUNTON & STEELES**
2 Bedrooms brand new walkout bsmt for rent. Sep. entrance, parking & Sep. laundry. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.740.7292**

**MARKHAM & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to Centennial college & HWY 401. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.221.5886**

**STAINES & STEELES**
2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & laundry. Rent $2,100 including utility. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.245.4221**

**BRIMLEY & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**WARDEN & LAWRENCE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to bus stop, Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.569.0657**

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**TAIUNTON & BURKHOLDER PICKERING** – 2 Bedrooms new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 Parking. Close to bus stop. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.680.3167**

**BIRCHMOUNT & LAWRENCE**
3 Bedrooms & 2 washroom bsmt for rent. Sep. entrance & 3 Parking. Close to bus stop & all facilities Avail. immediately.
**437.233.4848/647.667.2762**

மேலும் பக்கங்கள் 13, 14, 15

## BASEMENT FOR RENT

**NINTH LINE & 14TH AVENUE**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to all facilities. Avail. immediately.
**647.621.4309 / 437.882.0377**

**EGLINTON & BIRCHMOUNT**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.906.8086**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a main floor Sharing washroom & kitchen. Ladies only. Close to TTC & Shopping center. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.533.2209**

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

**WARDEN & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. No parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.808.0406**

**MIDDLEFIELD & HIGHGLEN**
Room for rent in main floor. Parking. Close to Aaniin community centre, high school & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.762.5804**

**MIDLAND & LAWRENCE**
2 Bedrooms for rent in a house with attached washroom. Close to TTC & all facilities. Avail. immediately.
**647.763.8640/ 647.765.2743**

**KENNEDY & EGLINTON**
1 Large room for rent in a 2 bed room Apartment. 2 People/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.540.9520**

**MORRISH & ELLESMERE**
3 Bedrooms for rent in a house. Parking. Single room $1,000. Shared room $500 Close to library, schools & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.994.7849**

**MORNINGSIDE & ELLESMERE**
Furnished rooms for rent. Single room $900 & sharing room (2 person) - $500 per person. (Including utility) Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.312.1947**

Vlambaram - November 01 2024 New _Vlambaram-Front 2024-10-31 7:03 PM Page 13



## ROOM FOR RENT

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom for rent in an apartment. Internet. Single person preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.882.6939**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a 3 bedrooms bsmt. Close to bus stop (133, 39, 116, 53) & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.262.6616**

**HARMONY & TAUNTON**
Room available for rent in Oshawa. Close to all amenities and transportation. Student or working professional preferred.
தொடர்புகளுக்கு: **647.545.0344**

**NEILSON & SHEPPARD**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking. Single /2 person preferred. Rent negotiable. Avail. immediately. தொடர்புகளுக்கு: **437.982.3330/ 647.237.6826**

**VICTORIA PARK & FINCH**
1 furnished Bedroom for rent in Town house. Close to TTC 24 hrs. Only working Female. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.394.1891**

**WHITES RD & TAUNTON**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Ladies only. Parking available. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.719.0951**

**14TH AVENUE & 9TH LINE**
1 Room for rent in a bsmt with atta ched washroom. Shared kitchen. Parking. Girls only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.1796**

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom for rent in 2 bedrooms bsmt. 1 Parking. Wifi included. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.721.2637**

**BRIMLEY & EGLINTON**
Room & Bachelor room with wash room & kitchen for rent. Parking. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193/ 416.892.7762**

மேலும் பக்கங்கள் 12, 14, 15

## ROOM FOR RENT

**MIDLAND & LAWRENCE**
2 Bedrooms for rent in a house with attached washroom. Close to TTC & all facilities. Avail. immediately.
**647.763.8640/ 647.765.2743**

**MARKHAM & DENISON**
1 Bedroom for rent in a bsmt. 1 parking, free wifi & utilities included. Good for single male. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms for rent in a house. No parking. Students / working Male preferred. No smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.258.3256**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom available in a 3 bed room bsmt. Male only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom for rent in upstairs. parking & internet. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.576.1074**

**BRIMLEY & STEELES**
1 Bedroom available in a 2 bedrooms bsmt. Working / student Girl to share with another girl. Sep. entrance .Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.8349**

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms for rent in a main floor. Sharing kitchen & washroom. Working female/ couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.542.4094**

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent in a house. Par king. Only for male. No smoking. Rent - $900. Avail. immediately.
**647.459.8050/647.877.7085**

**MCCOWAN & SHEPPARD**
1 Room for rent in a luxury condo. (ground floor). Sep. washroom. Female preferred. Close to all facilities.Avail. immediately.
**647.760.3376 / 647.835.3376**

**NINTH LINE & BUR OAK**
1 Master bedroom with attached washroom for rent. 1 Parking. Female only. Avail. immediately.
**416.220.3416/905.201.8205**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & FINCH**
1 Sharing room for rent in a 3 bed room bsmt. Sep. entrance & Parking. Male only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## HOUSE FOR RENT

**SIMCOE & TAUNTON (OSHAWA)**
5 Bedrooms house for rent. 4 Parking. Close to Durham college & University. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MEADOWVALE & ELLESMERE**
4 Bedrooms in upstairs & 2 bed rooms in bsmt full house for rent. 3 Min. walking distance to bus stop. & HWY 401. Avail. immediately.
**647.894.5585 / 647.997.7248**

**WHITBY NORTH**
3 Bedrooms house for rent. 3 wash rooms. 2 garage & 4parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.836.5482**

**NINTH LINE & HWY 07**
4 Bedrooms & 2.5 washrooms full house for rent. 7 Parking. Close to hospital, Go Train, bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.674.4243**

**WHITES RD & TAUNTON**
4 Bedrooms house & 2 bedrooms bsmt for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.333.5606**

**BRIMLEY & FINCH**
3 Bedrooms house for rent. 2 Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

## CONDO. FOR RENT

**WARDEN & HWY 07**
1 + Den Condo. for rent. 1 Parking. Close to HWY 407 & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.989.3804**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**CONLINS & RITSON (OSHAWA)**
1 Bedroom furnished walkout bsmt for rent. washroom, sep. laundry, kitchen & hall Close to Oshawa university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.524.9001**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
3 Bedrooms & 2 full washroom brand new bsmt for rent. Sep. entrance & 1 Parking. Located beside Aaniin community centre. Avail immediately.
தொடர்புகளுக்கு: **416.625.7535**

## BASEMENT FOR RENT

**VARCOE & KING ST.**
**OSHAWA –** 1 Bedroom + Den bsmt for rent. Family/couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.4717**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & ELSON**
2 Bedrooms bsmt for rent. Sep.entrance, 1 parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.625.3243**

## BASEMENT FOR RENT

**SEWELLS & MORNINGSIDE**
3 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 parking. Close to Centennial college, U of T & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.262.3491**

## BASEMENT FOR RENT

**WILLOWLEA DR. & ELLESMERE**
2 Bedrooms high ceiling new bsmt for rent. 1.5 washroom, Sep. en trance. 1 Parking. Close to 24 hrs. bus service, Scar. university & cen tennial college. Avail immediately.
தொடர்புகளுக்கு:**416.305.5158**

## BASEMENT FOR RENT

**DUNDAS & THICKSON**
**WHITBY –** 2 Bedrooms newly renovated bsmt for rent. Sep. entrance & 1 Parking. Close to HWY 401, Whitby mall & all facilities. Avail immediately.
**289.356.2078/ 416.835.3517**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units**

**647-861-8240**

## BASEMENT FOR RENT

**WESTNEY & ROSSLAND (AJAX)**

Newly renovated 2 Big bed rooms bsmt for rent. Sep. en trance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.834.2794**

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**

Rooms for rent. Rent $750

**CONLINS & SHEPPARD**

Rooms for rent. Shared kitchen, washroom & 1 parking. Close to UofT. Single room $800, Shared room $900. Avail. immediately.

**647.622.3289/416.805.3355**

## வாகனப் போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்டதூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## BASEMENT FOR RENT

**THICKSON & ROSSLAND**

**WHITBY –** 3 Bedrooms brand new bsmt for rent. Sep. entrance, sep. laundry & 2 parking. Close to bus stop, University, No Frills & all facilities.Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.321.1968**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & MULOCK (NEWMARKET)**

1 Bedroom bsmt for rent in near South Lake hospital. Sep. entrance & parking Female only. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **289.231.6620**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

2 Bedrooms in main floor (Female preferred) & 1 Bedroom in bsmt for rent. Parking available. 5 Min walking distance to bus stop. Close to all facilities. Avail immediately.

தொடர்புகளுக்கு: **437.213.6630**

## ROOM FOR RENT

**MCCOWAN & EGLINTON**

1 Room for rent in a Condo. Christian lady only. Super clean, gym,security. 5 minutes to Kennedy station.Close to all Facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.710.5852**

## BASEMENT FOR RENT

**ELLESMERE & SCAR. GOLF CLUB**

2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. No smoking & no pets. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.998.0181**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**

